விலை: 50.00
பக்கங்கள் - 16

Website : www.valampurii.lk
Viber : 076 636 3378

Registered as a News Paper in Sri Lanka

# வலம்புரி
Valampurii

E-mail: valampurii@yahoo.com

சங்கு 26

ஒலி 081 வள்ளுவர் ஆண்டு 2056 மாசி 26 திங்கட்கிழமை (10.03.2025) தொலைபேசி 222 3378, பக்ஸ் 222 7829

கல்யாண மாலை
சர்வதேச இலவச திருமண சேவை



T.P: 021 720 1005
இல.144,
பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.
kalyanamalai.jaffna@gmail.com
4000/= மட்டுமே

## உள்ளூராட்சித் தேர்தலில் தமிழரசு தனித்துப் போட்டி

### கொழும்பில் போட்டியிடுவதில்லை மத்திய குழுவின் முடிவு என சுமந்திரன் அறிவிப்பு



(வவுனியா)

அநுர அலை இன்னும் குறையவில்லை. அதனைக் குறைத்து மதிப்பிட முடியாது. அத்துடன் எதிர்வரும் உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் கொழும்பு மாவட்டத்தில் போட்டியிடுவதில்லை எனத் தமிழரசுக்

04ஆம் பக்கம் பார்க்க

## காணொளியில் ஏளனம் யூரியூப்பரிடம் விசாரணை

### இளவாலை பொலிஸார் நடவடிக்கை

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணத்தில் பெண் தலைமைத்துவக் குடும்பம் ஒன்றின் வீட்டினுள் இரவு வேளை நுழைந்து, அநாகரிகமாக நடந்து கொண்ட யூரியூப்பர் ஒருவர் இளவாலைப் பொலிஸ் நிலையத்தில் தடுத்து வைக்கப்பட்டு விசாரணைக்குட்படுத்தப்பட்டுள்ளார்.

யாழ்ப்பாணம், பருத்தித்துறைப் பகுதியைச் சேர்ந்த இளைஞன் ஒருவர் வறிய

15ஆம் பக்கம் பார்க்க

## தேசபந்து தென்னகோனின் சொத்துக்கள் பறிமுதல்

### பாதுகாப்புப் பிரதி அமைச்சர் உறுதி



(கொழும்பு)

தற்போது பிடியாணை பிறப்பிக்கப்பட்டுள்ள முன்னாள் பொலிஸ்மா அதிபர் தேசபந்து தென்னகோன் தொடர்ந்தும் நீதிமன்றத்தில் முன்னிலையாவதைத் தவிர்த்து வந்தால், சட்ட

15ஆம் பக்கம் பார்க்க

## ரணிலுக்கு ஆப்பு வைத்த அல் ஜசீரா

# பட்டலந்த வதை முகாம் குற்றவாளி ரணில்?

### ஆராயத் தயாராகிறது அமைச்சரவை

(கொழும்பு)




ரணில் விக்கிரமசிங்கவிடம் அண்மையில் அல் ஜசீரா சர்வதேச தொலைக்காட்சி எடுத்த செவ்வி ரணில் விக்கிரமசிங்கவுக்கு பெரும் சிக்கலை ஏற்படுத்திய நிலையில், பட்டலந்த ஆணைக்குழு அறிக்கை குறித்து இவ் வாரம் அமைச்சரவை ஆராயும் என அமைச்சரவைப் பேச்சாளர் நளிந்த ஜயதிஸ்ஸ தெரிவித்துள்ளார்.

(02ஆம் பக்கம் பார்க்க)

## அநுர - டிரான் டீலால் தப்பிக்கும் தென்னகோன்

### சாடுகிறார் சம்பிக்க



(ஹோமகம)

ஜனாதிபதி அநுர குமார திஸாநாயக்கவுக்கும் முன்னாள் அமைச்சர் டிரான் அலஸுக்கும் இடையிலான ஒப்பந்தமே, முன்னாள் பொலிஸ்மா அதிபர் தேசபந்து தென்ன

15ஆம் பக்கம் பார்க்க

## அநுர அரசின் மீது கடும் அதிருப்தியில் நாட்டு மக்கள்

### தக்கபாடம் புகட்டுவர் என்கிறார் கம்மன்பில



(கொழும்பு)

நாட்டை நிர்வகிக்க முடியாமல் அநுர அரசாங்கம் தடுமாறுகிறது. ஜனாதிபதி அநுரவிடம் பொருளாதாரக் கொள்கையில்லை. தேசிய மக்கள் சக்தியின் தேர்தல் கால வாக்குறுதிகளை நம்பி வாக்களித்த மக்கள் அதிருப்தி

15ஆம் பக்கம் பார்க்க

## போலிப் பல்கலைக்கழகங்கள் மாணவர்களே அவதானம்

### கல்வி அமைச்சு அவசர அறிவிப்பு

(கொழும்பு)

வெளிநாட்டுப் பல்கலைக்கழகங்களில் பட்டப்படிப்புக்களை ஆரம்பிக்க முன்னர் சம்பந்தப்பட்ட பல்கலைக்கழகம் தொடர்பிலும் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு அதனை அங்கீகரித்துள்ளதா? என்பது தொடர்பிலும் உள்ளூர் நிறுவனத்துக்கும் குறித்த வெளிநாட்டுப் பல்கலைக்கழகத்துக்கும் இடையேயான ஒப்பந்தம் தொடர்பிலும் நன்கு ஆராய்ந்து, அறிந்து விண்ணப்பிக்குமாறு கல்வி அமைச்சு அவசர அறிவிப்பொன்றை

15ஆம் பக்கம் பார்க்க

## சுருக்கிட்ட நிலையில் ஆணின் சடலம் மீட்பு

### கிளிநொச்சியில் சம்பவம்

(கிளிநொச்சி)

கிளிநொச்சி தருமபுரம் பகுதியிலுள்ள புனர்வாழ்வு சிகிச்சை நிலையம் ஒன்றிலிருந்து ஆண் ஒருவரது சடலம் சுருக்கிட்ட நிலையில் மீட்கப்பட்டுள்ளது.

புனர்வாழ்வு சிகிச்சைக்காக கிளிநொச்சி மாவட்ட பொது வைத்

02ஆம் பக்கம் பார்க்க

## சுற்றுலா விசாவில் யாழ்.வந்த மதமாற்ற பிரசாரகர்கள்

### நாடு கடத்தப்பட்டனர்

(பலாலி)

இந்தியாவிலிருந்து வருகை தந்து யாழ்ப்பாணம் மாதகல் பகுதியில் நோய்களைக் குணப்படுத்துவதாகக் கூறி தீவிர மதப் பிரசாரத்தில் ஈடுபட்ட குழுவினர், சுற்றுலா விசா நடைமுறைகளை மீறிய குற்றச்சாட்டின் பேரில் இந்தியாவுக்கு நாடு கடத்தப்பட்டுள்ளனர்.

இலங்கைக்குச் சுற்றுலா

02ஆம் பக்கம் பார்க்க

## ஆசிரியர் திடீர் மரணம்



(யாழ்ப்பாணம்)

வீட்டில் மயக்கமுற்ற நிலையில் பருத்தித்துறை வைத்தியசாலையில் நேற்று அனுமதிக்கப்பட்ட ஆசிரியர் ஒரு

02ஆம் பக்கம் பார்க்க

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

## சுற்றுலா...

விசாவில் வருகை தருபவர்கள் தொழில் முயற்சிகளில் ஈடுபடுவது தடை செய்யப்பட்டுள்ளது.

இந் நிலையில் சுற்றுலா விசா மூலம் இலங்கைக்கு வருகை தந்த இவர்கள் மாதகல் பகுதியில் தீவிர மதப் பிரசாரங்களுக்குத் தயாராகி வந்தமை குடிவரவு குடியகல்வுத் துறை புலனாய்வாளர்களால் கண்டறியப்பட்டுள்ளது.

இதனையடுத்து நேற்று முன்தினம் இரண்டு மதபோதகர்கள் பொலிஸாரால் கைது செய்யப்பட்டு விசாரணைகளின் பின் கட்டுநாயக்க விமான நிலையமூடாக நாடு கடத்தப்பட்டனர்.

இதேவேளை இவர்களுடன் தொடர்புடைய யாழ்ப்பாணத்தில் சிற்ப வேலைகளில் ஈடுபட்டிருந்த எட்டுப் பேர், யாழிலுள்ள உணவகங்களில் பணிபுரிந்த ஐவர் என மேலும் பதின்மூன்று இந்தியப் பிரஜைகள் பலாலி விமான நிலையம் ஊடாக சென்னைக்கு நாடு கடத்தப்பட்டுள்ளனர். (ந-7)

## ஆசிரியர்...

வர் உயரிழந்துள்ளார்.

வடமராட்சி வதிரியைச் சேர்ந்த நெல்லியடி மத்திய கல்லூரியின் உடற்கல்வி ஆசிரியர் பாலகிருஷ்ணன் தணிகைவேள் (வயது-45) என்பவரே இவ்வாறு உயிரிழந்தவராவார்.

மாரடைப்பே இவரின் மரணத் துக்குக் காரணம் எனத் தெரியவருகிறது.

(ந-7,33,60)



பராசக்தி படப்பிடிப்பிற்காக தென்னிந்திய பிரபல நடிகர் சிவகார்த்திகேயன் நேற்று ஸ்ரீலங்கா எயார் லைன்ஸ் விமானம் மூலம் இலங்கைக்கு வருகை தந்தார்.

அம்மன் துணை
வற்றாப்பளை கண்ணகி அம்மன் கோவில் பரிபாலன சபை
கூறுவிலை மனுக்கோரல்
வற்றாப்பளை கண்ணகி அம்மன் ஆலயத்தின் பின்வரும் வேலைகளுக்காக கூறுவிலை மனுக்கள் கோரப்படுகின்றன.
1. வர்ணம் பூசுதல்
2. வடக்கு வாசல் கோபுர வேலை
விண்ணப்பப் படிவங்களை ஆலயத்தின் காரியாலயத்தில் பெற்று பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பப் படிவங்களை 16.03.2025 இற்கு முன்னர் காரியாலயத்தில் ஒப்படைக்கவும்.
காரியாலய இலக்கம் : 024 324 3558
தலைவர் : 077 375 7448
செயலாளர் : 077 936 2643
பொருளாளர் : 076 182 8750
தலைவர் செயலாளர்
(C-2419)

ஓம் சரவணபவ
45 ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்
அன்னை மடியில் 23.10.1943
ஆண்டவன் அடியில் 25.01.2025



அமரர்
மங்களநாயகி திருநாவுக்கரசு
திதி: தேய்பிறை ஏகாதசி
அன்பையே அணியாய் ஆர்வமே தொனியாய்
அறுவருள் மூத்தவளாய் அவனியில் வந்து
இன்பமே சூழ இணையிலா இல்லாள்
இருவர் தம் பிள்ளைகள், பேரர், மருமக்கள்
சகோதர, சகோதரிகள், மைத்துனர், மைத்துனிகள்
மருமக்கள், பெறாமக்கள், அயலவர், நண்பர்
துன்பமே அகல பரிவுடன் ஆதரித்து
தூய்மையாய் அறநெறி வாழ்ந்த
எம்! ஆருயிர் மனைவியே, அன்னையே
நீரும் ஆகுதியானீர் இறை அருளடி
தன்னில் நிதம் மேவுவீரே.
ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!
எமது அன்புத் தாயாரின் மரணச் சடங்கில் கலந்து கொண்டு அனைத்து உதவிகளையும் வழங்கிய அன்புள்ளங்கள் அனைவருக்கும் எமது இதயபூர்வமான நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம்
சுன்னாகம் கிழக்கு,
சுன்னாகம்
(913)
குடும்பத்தினர்:

## பட்டலந்த...

1980களின் பிற்பகுதியிலும் 1990 இன் ஆரம்பத்திலும் இடம்பெற்ற சட்டவிரோத படுகொலைகள், சித்திர வதைகள் மற்றும் அவற்றுடன் அரசியல் வாதிகளிற்கு உள்ள தொடர்புகள் குறித்த ஆவணமான பட்டலந்த விசாரணை ஆணைக்குழு அறிக்கை குறித்து அரசாங்கம் ஆராயவுள்ளது.

பட்டலந்த வீடமைப்புத் திட்டத்தில் இடம்பெற்ற மனித உரிமை மீறல்களில் முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவிற்குத் தொடர்புள்ளதாகக் குற்றம்சாட்டும் இந்த அறிக்கை குறித்து சமீபத்தைய அல் ஜசீரா பேட்டியின் பின்னர் கவனம் திரும்பியுள்ளது. நாட்டில் இடம்பெற்ற அரசியல் மாற்றங்களைத் தொடர்ந்து இந்த விவகாரத்திற்குப் பொறுப்புக்கூறப்பட வேண்டும் என்ற வேண்டுகோள்களும் எழுந்துள்ளன.

ரணில்விக்கிரமசிங்கவிற்கு எதிராகக் குற்றச்சாட்டுகள் காணப்படுவதை ஏற்றுக்கொண்டுள்ள அமைச்சரவைப் பேச்சாளர் விக்கிரமசிங்க இந்த விடயத்தில் ரணில் தொடர்புபட்டுள்ளார் என்பது அனைவருக்கும் தெரிந்த உண்மை. இந்தக் குற்றச்சாட்டுகளை எங்களால் நிராகரிக்க முடியாது எனக் குறிப்பிட்டுள்ளார்.

எனினும் அரசாங்கம் எவ்வாறான நடவடிக்கைகளை எடுக்கும் என்பது குறித்து கருத்துத் தெரிவிக்க மறுத்துள்ள அமைச்சரவைப் பேச்சாளர், அமைச்சரவையில் இது குறித்து ஆராய்ந்த பின்னர் தீர்மானம் எடுக்கப்படும் எனக் குறிப்பிட்டுள்ளார்.

அறிக்கையை, அடிப்படையாக வைத்து ரணில் விக்கிரமசிங்கவின் குடியுரிமை இரத்துச்செய்யப்படுமா? என்ற கேள்விக்கு அவ்வாறான ஒரு அறிக்கை இருப்பதே நடவடிக்கை எடுப்பதற்குப் போதுமான காரணமாக உள்ளது எனக் குறிப்பிட்டுள்ளார்.


1994 இல் சந்திரிகா குமாரதுங்க ஏற்படுத்திய பட்டலந்தை விசாரணை ஆணைக்குழு பட்டலந்த வீடமைப்புத் திட்டத்தில் சித்திரவதைகள், சட்டவிரோதமாகத் தடுத்துவைத்தல், சட்டவிரோதப் படுகொலைகள் இடம்பெற்றதாக முன்வைக்கப்பட்ட குற்றச்சாட்டுகள் குறித்து விசாரணைகளை மேற்கொண்டது.

ஜே.விபியின் கிளர்ச்சியின் போது ஜே.விபியினருக்கு எதிரான நடவடிக்கைகளில் ஈடுபட்ட அரசாங்கம் பட்டலந்த வீடமைப்புத் திட்டத்தை விசாரணை தடுப்பு முகாமாகப் பயன்படுத்தியது.

1997 இல் வெளியான ஆணைக்குழுவின் அறிக்கை, பட்டலந்த வீடமைப்புத் திட்டத்தில் இடம்பெற்ற மனித உரிமை மீறல்களிற்கு அக்காலப் பகுதியில் சிரேஷ்ட அமைச்சராகப் பணியாற்றிய ரணில் விக்கிரமசிங்க உட்பட பல அரசியல்வாதிகளுக்கும் பாதுகாப்புப் படையினருக்கும் தொடர்புள்ளது எனத் தெரிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (ந-7)

வேலைவாய்ப்பு
கிளிநொச்சி, பளை நகரங்களில் உள்ள வர்த்தக நிறுவனங்களின் காரியாலயத்தில் பணி புரிய அப்பகுதியைச் சேர்ந்த கடைக் கணக்கு எழுதத் தெரிந்தவர்கள் தொடர்பு கொள்ளவும்.
077 066 9467
(C-2422)

கண்ணீர் அஞ்சலி
எமது பாடசாலை ஆசிரியர்
திரு. தம்பித்துரை பகீரதராஜ்
அவர்களின் அன்பு மாமனார்
திரு. சுப்பிரமணியம் கமலநாதன்



அவர்கள் காலமானதையிட்டு துயருற்றிருக்கும் அன்னாரின் குடும்பத்தினருக்கு ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்வதோடு அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.
சிரேஷ்ட மாணவர் நலன்புரிக் கழகம்
யா/ புனித சாள்ஸ் மகா வித்தியாலயம்
பிரதான வீதி, யாழ்ப்பாணம்.

## சுரு...

தியசாலையில் இருந்து குறித்த புனர்வாழ்வு சிகிச்சை நிலையத்துக்கு அனுப்பி வைக்கப்பட்ட கிளிநொச்சி திருநகர்ப் பகுதியைச் சேர்ந்த லக்சன் (வயது 25) என்ற ஒரு பிள்ளையின் தந்தையே இவ்வாறு சடலமாக மீட்கப்பட்டுள்ளமை பொலிஸாரின் ஆரம்ப கட்ட விசாரணைகளில் தெரியவந்துள்ளது.

சடலம் பிரேத பரிசோதனைக்காக கிளிநொச்சி மாவட்ட பொது வைத்திய சாலையில் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

(ந-7,316)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முன்பள்ளி ஆசிரியர்களின் சம்பளத்தை அதிகரிக்குமாறு ரவிகரன் எம்.பி கோரிக்கை

(கொழும்பு)

**முன்பள்ளி ஆசிரியர்களுக்கு சம்பளத்தை அதிகரிக்க மகளிர் விவகார அமைச்சின் ஒத்துழைப்பும் அவசியம் என வன்னி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் துரைராசா ரவிகரன் வலியுறுத்தியுள்ளார்.**



பாராளுமன்றில் நேற்று முன்தினம் இடம்பெற்ற 2025 ஆம் ஆண்டிற்கான வரவு செலவுத்திட்ட மகளிர் மற்றும் சிறுவர் அலுவல்கள் அமைச்சின் மீதான குழு நிலை விவாதத்தில் கலந்து கொண்டு கருத்துத் தெரிவிக்கும் போதே அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், முன்பள்ளிகளில் மிகவும் குறைந்த சம்பளத்தில் ஆசிரியர்களாக மகளிர்களே கடமையாற்றுகின்றார்கள்.

இவ்வாறு கடமையாற்றும் முன்பள்ளி ஆசிரியர்களுடைய ஒருமாத கொடுப்பனவு வெறும் 6,000 ரூபா மட்டுமேயாகும். என்ன செய்வது, எப்படிச் சமாளிப்பது என்று தெரியாமல் தவிக்கின்றார்கள்.

இதுதொடர்பில் பலரும் என்னிடம் முறையிட்டுள்ளார்கள். இந்த முன்பள்ளி ஆசிரியர்களின் ஊதியப் பிரச்சினைக்கு தீர்வினை வழங்குவதற்கு மகளிர் விவகார அமைச்சரும் தம்மாலான ஒத்துழைப்புக்களை வழங்கவேண்டும்.

முன்பள்ளி ஆசிரியர்களின் ஒப்பற்ற சேவைக்குரிய கொடுப்பனவு போதுமானதா? சற்று எண்ணிப் பாருங்கள். இந்த விடயத்தில் அரசு கவனம் செலுத்த வேண்டும்.

அதற்கு மகளிர் விவகார அமைச்சின் ஒத்துழைப்பும் மிகவும் அவசியம் என பாராளுமன்ற உறுப்பினர் ரவிகரன் தெரிவித்தார். (நி-8)

# தேங்காய் பற்றாக்குறையால் மூடப்பட்ட நிறுவனங்கள்

(கொழும்பு)

நாட்டில் தற்போது நிலவும் தேங்காய் தட்டுப்பாடு காரணமாக பல உள்ளூர் தேங்காய் எண்ணெய் உற்பத்தி நிறுவனங்கள் மூடப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

இதன் விளைவாக சுமார் 450,000 பேர் வேலை இழந்துள்ளதாகக் கூறப்படுகிறது.

நாட்டின் தேங்காய்களில் கணிசமான பகுதி ஏற்றுமதி செய்யப்படுவதால், உள்ளூர் தேங்காய் எண்ணெயின் உற்பத்திக்கும் இது ஒரு தடையாக மாறியுள்ளது.

இதற்கிடையில், அத்தியாவசிய லேபிளின் கீழ் தேங்காய் எண்ணெய் என்ற பெயரில் இறக்குமதி செய்யப்படும் பாமாயில் அல்லது பிற எண்ணெய்களுக்கு வற் விதிக்கப்படாது என்று கூறப்படுகிறது.

எவ்வாறாயினும் உள்ளூர் தேங்காய் எண்ணெய்க்கு 15% வற் வரி செலுத்த வேண்டியது நியாயமற்றது என்றும் தொழிலதிபர்கள் சுட்டிக்காட்டியுள்ளனர்.

அதேவேளை, உள்ளூர் தேங்காய் எண்ணெய் உற்பத்தியாளர்கள், உள்ளூர் தொழிற்சாலைகளை நடத்துபவர்களுக்கு இது ஒரு தடையாக இருப்பதாகவும், அந்த தொழிற்சாலைகளின் வீழ்ச்சிக்கு இது ஒரு காரணமாக மாறியுள்ளது என்றும் சுட்டிக்காட்டுகின்றனர். (நி-8)

# உள்ளூராட்சி மன்ற தேர்தலில் தமிழரசுக் கட்சி தனித்து போட்டி

## சுமந்திரன் தெரிவிப்பு

(மட்டக்களப்பு)

"இலங்கை தமிழரசுக் கட்சி இம்முறை தனித்து உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் போட்டியிடத் தீர்மானித்துள்ளதாகவும், தமிழ் தேசிய கூட்டமைப்பாக போட்டியிடும் பேச்சுகள் இடைநிறுத்தப்பட்டுள்ளதாகவும்" இலங்கை தமிழரசுக் கட்சியின் பதில் பொதுச் செயலாளரும் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினருமான எம்.ஏ.சுமந்திரன் தெரிவித்தார்.

மட்டக்களப்பில் நேற்று முன்தினம் இடம்பெற்ற இலங்கை தமிழரசுக்கட்சியின் கூட்டத்தில் கலந்து கொண்டு கருத்துத் தெரிவித்த போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இதன்போது உள்ளூராட்சி மன்ற தேர்தலில் தாம் முற்றும் மாறுபட்ட நிலைமையினையே எதிர்பார்ப்பதாகவும், எனவே தாம் தனித்து போட்டியிடத் தீர்மானித்துள்ளதாகவும் தெரிவித்தார்.

எவ்வாறு இருப்பினும் ஒரு கட்சி தனியாக நிர்வாகத்தை அமைப்பது என்பது சாத்தியப்பாடு குறைந்த அளவில் காணப்படுவதால், தேர்தலின் பின்னர் தாம் மற்றைய தமிழ் கட்சிகளுடன் இணைந்து நிர்வாகங்களை அமைக்க வேண்டிய தேவை காணப்படுவதாகவும் அவர் தெரிவித்தார். (நி-8)

# உள்ளூராட்சித் தேர்தல்

# 1 கோடியே 73 லட்சம் பேர் வாக்களிக்கத் தகுதி

(கொழும்பு)

எதிர்வரும் உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் வாக்களிப்பதற்கு ஒரு கோடியே 72 இலட்சத்து 96 ஆயிரத்து 330 பேர் தகுதி பெற்றுள்ளதாகத் தேர்தல்கள் ஆணையாளர் நாயகம் சமன் ஸ்ரீ ரத்நாயக்க தெரிவித்துள்ளார்.

நடைபெறவுள்ள 336 உள்ளூராட்சி மன்றங்களுக்கான தேர்தல் தொடர்பில் நேற்று முன்தினம் கலந்துரையாடல் ஒன்று இடம்பெற்றது.

இந்த கலந்துரையாடலில் மாவட்ட தேர்தல் ஆணையாளர்கள், துணை மற்றும் உதவி தேர்தல் ஆணையாளர்கள் கலந்து கொண்டதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கலந்துரையாடலின் பின்னர் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

4,872 வட்டாரங்களுக்கான உறுப்பினர்களைத் தெரிவு செய்வதற்கான இந்த தேர்தல் நடாத்தப்படவுள்ளது.

எதிர்வரும் உள்ளூராட்சி மன்ற தேர்தலுக்கான ஏற்பாடுகள் தொடர்பில் கலந்துரையாடப்பட்டதாகத் தேர்தல்கள் ஆணையாளர் நாயகம் சமன் ஸ்ரீ ரத்நாயக்க தெரிவித்துள்ளார். (நி-8)

# கோழி இறைச்சி, முட்டை விலைகள் அதிகரிப்பு

(கொழும்பு)

சந்தையில் கோழி இறைச்சி மற்றும் முட்டையின் விலை தற்போது அதிகரித்து வருவதாக அகில இலங்கை கோழிப் பண்ணை வர்த்தகர்கள் சங்கத்தின் தலைவர் மாதலி ஜெயசேகர தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நேற்று முன்தினம் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்டு கருத்து தெரிவிக்கும் போதே அவர் இதனைத் தெரிவித்துள்ளார். இதன்போது நாடளாவிய ரீதியில் எதிர்வரும் புத்தாண்டு பண்டிகை காலத்தில் கோழி இறைச்சி மற்றும் முட்டைகளின் விலை வெகுவாக அதிகரிக்கும் எனத் தெரிவித்த அவர், கோழித் தீவன பற்றாக்குறையால் கோழி இறைச்சி மற்றும் முட்டைகளின் விலை அதிகரித்து வருவதாகவும் சுட்டிக்காட்டியுள்ளார். (நி-8)

# மதங்கள் தொடர்பான புத்தகங்களுக்கு தடையில்லை

## அரசாங்கம் அறிவிப்பு

(கொழும்பு)



மதங்கள் தொடர்பாக எழுதப்பட்ட புத்தகங்கள் மற்றும் படைப்புக்களை இறக்குமதி செய்வதற்கான தடை நீக்கம் செய்யப்பட்டுள்ளது.

புத்தசாசன, சமய மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சின் ஆலோசனைக் குழு எடுத்த முடிவின்படியே இந்த தடை நீக்கப்பட்டுள்ளது.

பாதுகாப்பு அமைச்சகமும் இந்த தடையை நீக்குவதற்கு ஒப்புதல் அளித்ததாக பிரதி அமைச்சர் கமகெதர திஸாநாயக்க குறிப்பிட்டார்.

ஈஸ்டர் தாக்குதல்களைத் தொடர்ந்து, நாட்டிற்குள் மதப் படைப்புக்களை இறக்குமதி செய்வது தடை செய்யப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (நி-8)


5 ஆம் ஆண்டு நினைவஞ்சலி



அமரர்.
செல்லையா சிவதாசன்
(சன்லைற் டிறைகிளீனர்ஸ் முகாமையாளர்)

உம்மை நினைக்கும் பொழுது
உம் இழப்பின் வலியும்
உம் சிரிப்பின் இனிமையும்
எம்முன் கலக்கிறது
உம் கைபிடித்து நாம் இப்போது
நடப்பதில்லை என்றாலும்
உம் நம்பிக்கையும் உம் ஆசிகளும்
எப்போதும் எம்மோடு உண்டு.

தோற்றம் 24.02.1959 மறைவு 05.03.2020

(911)

புங்கன்குளம்,
அரியாலை.

குடும்பத்தினர்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ‘ருசியாக’ ரோகித் ‘ராசியாக’ ராகுல் சம்பியன்ஸ் டிராபியில் இந்தியா சம்பியன்

## ● 12 வருட காத்திருப்புக்கு கிடைத்தது பலன்
## ● இறுதியில் ஏமாந்தது நியூசிலாந்து




அணித் தலைவர் ரோகித்தின் சரவெடியான ஆட்டமும் ராகுலின் சாம்பியன்ஸ் டிராபி பைனலில் நியூசிலாந்து அணியைப் போராடி வீழ்த்தி 3வது முறையாக சம்பியன் பட்டத்தை இந்திய அணி கைப்பற்றியது.

டுபாயில் நடந்த இந்தப் போட்டியில் நாணயச்சுழற்சியில் வென்ற நியூசிலாந்து அணி துடுப்பாட்டத்தைத் தேர்வு செய்தது.

அதன்படி, களமிறங்கிய நியூசிலாந்து அணிக்கு இந்தியப் பந்துவீச்சாளர்கள் சிம்ம சொப்பனமாக திகழ்ந்தனர். இதனால், நியுஸி அணியால் ஓட்டங்களைக் குவிக்க முடியாமல் திணறியது.

எனினும் மிட்செல் (63), பிரேஸ்வெல் (53*), ரச்சின் ரவீந்திரா (37), பிலிப்ஸ் (34) ஆகியோரின் சிறப்பான ஆட்டத்தால் 50 ஓவர்கள் நிறைவில் 251 ஓட்டங்கள் சேர்த்தது.

பந்துவீச்சில் இந்திய அணி தரப்பில் வருண் சக்கரவர்த்தி, குல்தீப் யாதவ் ஆகியோர் தலா 2 ஷமி, ஜடேஜா ஆகியோர் தலா ஒரு விக்கெட்டைக் கைப்பற்றினர்.

தொடர்ந்து 252 ஓட்டங்கள் என்ற இலக்கை நோக்கி களமிறங்கிய இந்திய அணிக்கு அணித் தலைவர் ரோகித் ஷர்மா, கில் ஜோடி சிறப்பாக ஆடியது. ரோகித் ஷர்மா, சிக்சர்களும், பவுண்டரிகளுமாக பறக்கவிட்டு 41 பந்துகளில் அரைச்சதம் அடித்தார்.

இந்த ஜோடியின் அசுர ஆட்டத்தால் 17 ஓவர்கள் நிறைவில் இந்திய அணி 100 ஓட்டங்களைக் கடந்தது.

அணியின் ஓட்ட எண்ணிக்கை 105ஐ எட்டியநிலையில் சான்ட்னர் பந்தை கவர் திசையில் தூக்கி அடித்த போது பிலிப்ஸின் அபார பிடியெடுப்பில், கில் 31 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தார். இந்த அதிர்ச்சியில் இருந்து மீளுவதற்குள், ஹோலி ஒரு ஓட்டத்தில் வந்த வேகத்தில் ஆட்டமிழந்தார். பிரேஸ்வெல் பந்தில் எல்.பி.டபுள்யூ., முறையில் ஆட்டமிழந்தார். மறுமுனையில் சிறப்பாக ஆடிய அணித் தலைவர் ரோகித் ஷர்மா, 76 ஓட்டங்களில் ரச்சின் ரவீந்திரா பந்தில் ஸ்ரம்பிங் முறையில் ஆட்டமிழந்தார். இதன்முலம் வெறும் 17 ஓட்டங்களுக்கு 3 விக்கெட்டுக்களை இழந்து இந்திய அணி அதிர்ச்சி கொடுத்துள்ளது.

அதன்பிறகு ஜோடி சேர்ந்த ஸ்ரேயஸ் ஐயர் மற்றும் அக்ஷர் படேல் ஜோடி நிதானமாக ஆடி ரன்களை சேர்த்தது. இதனால், இந்திய அணி மெல்ல மெல்ல வெற்றியை நெருங்கியது. அரைச்சதம் அடிப்பார் என்று எதிர்பார்க்கப்பட்ட நிலையில், 48 ஓட்டங்களில் ஆட்டமிழந்தார் ஸ்ரேயஸ் ஐயர். தொடர்ந்து, அக்ஷர் பட்டேலும் 29 ஓட்டங்களில் பவிலியன் சென்றார்.

இறுதியில் கே.எல். ராகுல் மற்றும் ஹர்திக் பாண்டியாவின் சிறப்பான ஆட்டத்தால் இந்திய அணி 4 விக்கெட் வித்தியாசத்தில், ஒரு ஓவர் மீதம் இருந்த நிலையில் வெற்றி பெற்றது. கே.எல். ராகுல் கடைசி வரை ஆட்டமிழக்காமல் 34 ரன்கள் எடுத்திருந்தார்.

இதன்மூலம், 3வது முறையாக இந்திய அணி சாம்பியன்ஸ் டிராபியை வென்றது. ரோகித் ஷர்மா தலைமையில் இந்திய அணி அண்மையில் ரி20 உலகக்கிண்ணத்தை வென்றிருந்தது. தற்போது, சம்பியன்ஸ்டிராபியையும் வென்றுள்ளது.

**ஆட்ட நாயகன் விருது**

இந்த போட்டியில் 76 ரன்கள் எடுத்து இந்திய அணி யின் வெற்றிக்கு முக்கிய பங்காற்றிய அணித் தலைவர் ரோகித் சர்மாவிற்கு ஆட்ட நாயகன் விருது வழங்கப்பட்டது.

**தொடர் நாயகன்**

தொடர் நாயகன் விருது, நியூசிலாந்து அணியின் ரச்சின் (ந-7)

### ஏழாவது அதிசயம்

ஐ.சி.சி., அரங்கில், இந்திய அணி 7வது முறை கிண்ணம் வென்றது. நேற்று 3வது முறையாக (2002, 2013, 2025) சம்பியன்ஸ் டிராபி வென்ற இந்தியா, தலா 2 உலக கிண்ணம் (1983, 2011), "ரி20" உலகக் கிண்ணம் (2007, 2024) கைப்பற்றியது.

## உள்ளூராட்சித்...

கட்சியின் மத்திய குழு தீர்மானித்துள்ளதாகக் கட்சியின் ஊடகப் பேச்சாளரும் பதில் பொதுச் செயலாளருமான ஜனாதிபதி சட்டத்தரணி எம்.ஏ.சுமந்திரன் தெரிவித்துள்ளார்.

இலங்கைத் தமிழரசுக் கட்சியின் மத்திய செயற்குழுக் கூட்டம் நேற்று (09) காலை முதல் மதியம் வரை வவுனியாவில் அமைந்துள்ள தனியார் விருந்தினர் விடுதியில் இடம்பெற்றது. அதன் பின் வவுனியா, குருமன்காடு காளி கோவில் வீதியில் கட்சியின் அலுவலகம் திறந்து வைக்கப்பட்டு ஊடக சந்திப்பு நடைபெற்றது. அதில் கருத்துத் தெரிவித்த போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், மத்திய செயற்குழுக் கூட்டத்தின் போது உள்ளூராட்சி மன்றத் தேர்தல்கள் தொடர்பாக மட்டுமே ஆராயப்பட்டது. கட்சியின் மத்திய செயற்குழு உள்ளூராட்சி மன்றத் தேர்தல்களில் போட்டியிடுவது தொடர்பான தீர்மானங்களை ஏகமனதாக எடுத்துள்ளது. அதன்படி வடக்கு - கிழக்கு மாவட்டங்களின் அனைத்து உள்ளூராட்சி மன்றங்களிலும் இலங்கைத் தமிழரசுக் கட்சி தனித்துப் போட்டியிடும்.


தற்போது அநுர அலை குறைந்துவிட்டது என்கிறார்கள் சிலர். அப்படிக் கூறமுடியாது. அநுர அலை தற்போதும் இருக்கிறது. அது குறைவடைய சில காலம் செல்லலாம். நாம் கவனமாக கையாண்டு நாடு அநுரவோடு இருக்கட்டும். நமது ஊர் நம்மோடு. நாம் வீட்டோடு என செயற்பட வேண்டும்.

எமது உள்ளூர் அதிகாரங்களை நாம் விட முடியாது. எனவே நாம் இந்தத் தேர்தலில் சிறப்பானவர்களை, செல்வாக்கு மிக்கவர்களை நிறுத்த வேண்டும். அதன் மூலமே அதிக வெற்றி வாய்ப்பைப் பெற முடியும். அவ்வாறான தீர்மானங்களை எடுக்கும் அதிகாரம் எமது மாவட்ட கிளைகளுக்கு வழங்கியுள்ளோம்.

தேர்தல் முடிந்த பின் ஆட்சி அமைக்கின்ற போது ஏனைய தமிழ்க் கட்சிகளுடனும் பேசி ஆட்சி அமைப்பதற்கான ஆலோசனைகளும் முன்வைக்கப் பட்டு அது தொடர்பில் பேச்சுவார்த்தை நடத்துவதாகத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

மேலும் சில சபைகளின் நிலைமையைக் கருத்தில் கொண்டு ஏனைய தமிழ்க் கட்சிகளுடன் இணைந்து போட்டியிடலாம் எனத் தீர்மானித்துள்ளோம். அந்தவகையில் வவுனியா வடக்கு, சம்மாந்துறை, ஏறாவூர் ஆகிய பகுதிகளில் ஏனைய தமிழ்க் கட்சிகளுடன் இணைந்து போட்டியிடுவதற்காக தமிழரசுக் கட்சியின் வாசல் திறந்தே உள்ளது. வவுனியா வடக்கில் நாம் பிரிந்து செயற்படுவோமாக இருந்தால், பெரும்பான்மையினரிடம் அப்பிரதேச சபை செல்லும் வாய்ப்புள்ளது. சம்மாந்துறை, ஏறாவூர் ஆகிய பகுதிகளில் எம்மிடம் பெரும்பான்மை இல்லை. ஆகவே இணைந்து போட்டியிடலாம் எனத் தீர்மானித்துள்ளோம். (ந-7,250)

## சந்தைகளில் நேற்றைய விலை




| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | மருதனார்மடம் | சாவகச்சேரி | நெல்லியடி | கிளிநொச்சி |
|---|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 120 | 100 | 100 | 100-120 | 200 |
| உருளைக்கிழங்கு | 160 | 180 | 180 | 175 | 200 |
| பச்சைமிளகாய் | 500 | 600 | 500 | 500-600 | 600 |
| தக்காளி | 100 | 120 | 100 | 100 | 150 |
| மரவள்ளிக்கிழங்கு | 250 | 300 | 200 | 250-300 | 200 |
| கோவா | 300 | 280 | 400 | 200 | 400 |
| கரட் | 800 | 700-900 | 1000 | 800 | 1000 |
| பூசணி | 120 | 150 | 150 | 80 | 150 |
| புடோல் | 150 | 120 | 150 | 100 | 200 |
| வாழைக்காய் | 150 | 120 | 120 | 60-80 | 200 |
| சின்ன வெங்காயம் | 250 | 250 | 300 | 300-350 | 300 |
| பெரிய வெங்காயம் | 200 | 180 | 180 | 150 | 160 |
| பாகற்காய் | 300 | 400 | 500 | 400 | 400 |
| வெண்டக்காய் | 250 | 350 | 200 | 300 | 400 |
| கருணைக் கிழங்கு | 180 | 200 | 150 | 150 | 200 |
| பயற்றங்காய் | 400 | 380 | 300 | 500 | 600 |
| லீக்ஸ் | 350 | 400 | 300 | 250 | 400 |
| பீற்றூட் | 150 | 200 | 150 | 150 | 200 |
| கறிமிளகாய் | 500 | 500 | 400 | 600 | 400 |
| முருங்கைக்காய் | -- | 2500 | 1500 | 2000 | 2400 |
| போஞ்சி | 100 | 250 | 300 | 350 | 500 |
| கத்தரிதம்புள்ள | 100 | 80 | 150 | 100 | 120 |
| கீரை - 1 பிடி | 120 | 120 | 150 | 60-70 | 200 |
| தேசிக்காய் | 200 | 250 | 100 | 350-400 | 200 |
| தேங்காய் (ஒன்று) | 200 | 200 | 200 | 150-250 | 220-260 |
| இராசவள்ளி | 400 | 400 | 500 | 400 | 450 |
| வெங்காயப்பூ | 100 | 100 | 150 | 50-100 | 200 |
| முள்ளங்கி | 100 | 200 | 150 | 120 | 200 |
| பொன்னாங்காணி | 100 | 80 | 100 | 100 | 60 |
| வல்லாரை | 60 | 60 | 80 | 50 | 100 |
| ஈரப்பலா | 150 | 120 | 50 | 100 | 200 |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# யாழ்ப்பாணம்-கடைத்தெரு வேம்படிப் பிள்ளையார் 11.03.2025 இரதோற்சவம் தேர்வடம் பிடித்து,காரைநகர் ஈழத்துச் சிதம்பரம், திக்கரை முருகன் கோவில் கும்பாபிஷேகம் தரிசிப்போம் இடம்பிடிப்போம் கையிலாயத்தில் "ஓம் கணபதி"



விநாயகர் துதி

**வித்துக்கு வித்திட்ட வித்தகனே**
**விநாயகனே வேது மூலக் கணபதியே!**
**எத்திக்கும் தனை ஆட்கொண்டு**
**எழு பிறப்பும் சிறந்தோங்க உய்வித்து**
**முக்திக்கு வழி சொல்லி முடிவிலா**
**இன்பம் நல்கும் சித்தி விநாயகனே!**
**உன் திருவடி கதியென்று**
**சரணடைந்தோம் காப்பாற்று கணநாதனே!**

ஓம் என்ற பிரணவத்திலிருந்து தோன்றியவர் விநாயக சதுர்த்தி தனி சிறப்பு இன்பம் பெருகவும் துன்பம் அகலவும் "ஓம்"

முருகனுக்கு விசாகம், சிவபெருமானுக்கு திருவாதிரை ஆனால் விநாயகருக்கு நட்சத்திரம் இல்லை. இது ஓர் சிறப்பு, எந்நாளும் முதல் வழிபாடு விநாயகர் கடைத் தெரு வேம்படிப் பிள்ளையார் யாழ். வர்த்தகர்கள் வழிபடுவதும், தங்களது வருடப்பிறப்பில் புதுக் கணக்கில் ஏட்டில் கடைத்தெரு வேம்படி சித்திபுத்தி விநாயகரை என வரவு (1-11) குறித்து வணங்குவதும் அவர்கள் பல நன்மை பெறுவதும், இன்னும் நாம் அதைக் கடைப்பிடிப்பதும். அவரது அருளும் தங்களது வாழ்வில் அனுபவத்தில் தெரியலாம். யுத்தகாலத்தில் தினம் விநாயகரை வழிபடுவதும் அதன் பெறுபேறும், நமக்கு 09.04.1984 அன்று ஓர் கருமையான துன்பத்திலும் காத்தும், அண்மையில் வேறு ஓர் துன்பத்தில் இருந்து நமக்கு துணையானதும், பெருமானிடம் உன்திருவடி கதியென்று சரணடைந்தோம் காப்பாற்றும் கணநாதன்! கடைத்தெரு வேம்படி விநாயகர் ஆகும்.

அன்பினால் தினம் வழிபடும் மெய்யடியார்களின் பிறவிப் பிணியைப் போக்க வல்லவரது திருவடிகளை எண்ணி வாழ்பவருக்கு மனக்கவலை இல்லை என அதிரா அடிகள் மூத்த பிள்ளையார் மும்மணிக் கோவையில் பாடி அருளுகிறார். 17 ஆம் நூற்றாண்டில் கடைத்தெருவில் அமர்ந்த அருள் மிகு பிள்ளையார் 21 ஆம் நூற்றாண்டு 2024 கும்பாபிஷேகத்துடன் பாதசாரிகள் வழிபட ஈசான மூலையில் ஓர் பிரமாண்ட விக்கிரகம் பிள்ளையார் பட்டித் தோற்றமாக உள்ளதை உள்ளபடி வழிபடுவோம்.

ஆனைமுகக் கடவுளே தீவினைகளெல்லாம் வேரோடு களைய வல்லவர் அது மட்டுமல்ல திருமகள் கடாட்சமும் கிடைக்கும் என கபிலதேவ நாயனார் அருளிய பதிகம் அத்துடன் அதி உச்சமான சாரூப பதவியைக் கொடுக்கும், **எம்பெருமானை அன்போடு வழிபடுவோம்.** தன் அடியார் உள்ளத்து வாழ்கின்ற விநாயகன் உளம் பிரியான் திருப்பாதங்களை மனங்குழைந்து பணிவோம்.

**பெரும்பொருட்டு இடன் ஆம் பிரணவ வடிவில் பிறங்கிய ஓரதனிப்பேறே**
**அரும்பொருள் ஆகி மறைமுடிக் கண்ணெ அமர்ந்தபேர் ஆனந்த நிறைவே**
**தரும்பர போக சித்தியும், சுத்த தருமமும், முத்தியும் சார்ந்து**
**விரும்பினோர்க்கு அளிக்கும் வள்ளலே சித்தி விநாயகனே விக்கினேச் சுரனே**

**இராமலிங்க சுவாமிகள்** அருளியது

வஸ்து தத்துவங்கட் கெல்லாம் அடிப்படை-இடமாக உள்ள ஓங்கார உருவில் விளங்கிடும் ஒப்பற்ற பெரும் பாக்கியமே; அரிய வஸ்துவும் ஆகி வேத சிகரத்திலே ஒப்பற்ற பெரும் பேரின்ப பெருநிறைவே; கொடுக்கும் மேலான இன்பங் கைகூடதலையும் தூய அறத்தையும் வீட்டையும் உன்னடி சார்ந்து வேண்டினவர்கட்கு அளிக்கும் தாதவே, சித்தி விநாயகனே, விக்கினேஸ் சுரனே

**மேன்மைப் படுவாய் மனமே. கேள் ; விண்ணின் இடிமுன் விழுந்தாலும்**
**பான்மை தவறி நடுங்காதே! பயந்தால் எதும் பயன் இல்லை;**
**யான் என் உரைத்தேன் கோடி முறை; இன்னும் கோடி முறை சொல்வேன்**
**அன்மா ஆன கணபதியின் அருள் உண்டு அச்சம் இல்லையே** -**மகாகவி பாரதி** அருளியது.

ஆகாயத்திலிருந்து இடி வந்து கண் எதிரிலே விழுந்தாலும் கூறு கெட்டுப்போய் விலவிலத்து அஞ்சி நடுங்காதே-எப்பொருட்கும் உட் பொருளாய்- உயிர்க்கும் உயிராய் விளங்கும் கணபதியின் அருள் உண்டு அச்சம் இல்லையே.

கடைத் தெரு வேம்படி விநாயகரை வழிபாடு செய்து திக்கரை முருகன் ஆலயம் வசதி இருந்தும் ஆலய புனருத்தாரணம் மீள நடைபெற்று கும்பாபிஷேகம் நடைபெற்று கும்பாபிஷேகம் நடைபெறுவதற்குரிய தடைகளை நீக்கி பெருமானது திருவடிகளை பாடிப் பணிவோம்.

சிவகிரி மலையின் மேல் முருகனைக் கண்டு அந்த மலையை மீளத்தூக்க முடியாமல் இடும்பன் முயற்சியின் போது விநாயகப் பெருமான் உதவியது வரலாறு உள்ளது. நாமும் விநாயகரைப் பிரார்த்தித்து திக்கரை முருகனது ஆலய புனருத் தாரணம் அன்புடன் சீரமைப்போம். சிவபெருமானும் விநாயகர் முதலிய அருள் மூர்த்திகளும் பிரணவப் பொருளாய் உள்ளவர், கந்தபுராணம் சிவனுக்கு உபதேசம். சிவநிந்தையில் வரும் பாவம் உயிரைப் பல பிறவிகளில் இருந்து தொடர்ந்து வருத்தும் தேவர் புலம்பல். கடவுள் உயிருக்குயிராய் நின்றும் அருளுபவர். அடியார் வாயிலாகவும் அருளுவார். சூரன் வதை, ஆணவ மல நீக்கம், சிவஞானத்தாலே ஆணவ மல வலி முற்றாய் கெடும். கந்தபுராண வரலாறு உணர்த்தும் மெய்ப் பொருள்.

தமிழகத்துச் சிதம்பரம் போன்று ஈழத்துச் சிதம்பரம் ஆவது காரைநகர் அருள் மிகு திண்ணபுரம்.

**சந்தனச் சாந்தின் சுந்தர போற்றி**
**சிந்தனைக்கரி யசிவமே போற்றி**

சந்தனத்தோடு கலந்த திருநீற்றினை அணிந்த அழகனே போற்றி.நினைத்தர்க்கு அரிதான சிவமே போற்றி போற்றி(போற்றி என்பது வணக்கம்.) மாணிக்க வாசகர் பெருமான் அருளிய மணி மொழி.

எம் பெருமான் காரைநகர் , ஈழத்து மக்களாகிய குல தெய்வம், சிதம்பரக்கூத்தன், ஆலய புனருத்தாரனம் நடைபெற்று, சிவபூமியாகிய இலங்கை மக்கள் அனைவரும் இங்கு வழிபட அருள் மிகு கடைத்தெரு வேம்படி சித்தி புத்தி விநாயகரை பிரார்த்திப்போம்.

**"வேண்டிய வேண்டியாங் கெய்தலால்- செய்தவம் ஈண்டு முயலப்படும்-** திருக்குறள்

உயிர் கடவுளை நோக்கிச் செய்யும் வழிபாடு தவம் எனப்படும். தவத்தினால் வேண்டியன எல்லாம் பெற்றுக் கொள்ளலாம். நிறைவேற்றலாம்.

நமக்கு தொழில், கவிதை, நாட்டிற்கு உழைத்தல், இமைப் பொழுதும் சோராமல் இருத்தல். உமைக்கு இனிய மைந்தன் கணநாதன் நம் குடியை வாழ் விப்பான். சிந்தையே இம் மூன்றும் செய்.

**அம்மை நீ; அப்பன் நீ; அன்பு நிறை சுற்றம் நீ;**
**செம்மை சார் நட்பில் சிறந்தோன் நீ;- இம்மை அருள்**
**செல்வமோடு கல்வியும் நீ; தேசி விநாயகனே!**
**எல்லாமும் நீயே எமக்கு**

காரைநகர் ஈழத்துச் சிதம்பரம், திக்கரை முருகன் கும்பாபிஷேகம் காண்போம்.

**" மண்ணில் நல்லவண்ணம் வாழலாம் வைகலும்**
**எண்ணில் நல் அஃதிக்கு யாதும் ஓர் குறைவில்லை"**



**க.கு.க சிவபாலன், போசகர்,**
**ஈழத்துச் சிதம்பரம், மாணிக்கவாசகர் மடாலயம்.**

# இராசிபலன்

10.03.2025
மாசி 26, திங்கட்கிழமை
ஏகாதசி முற்பகல் 10.41 மணிவரை

பூசம் பின்னிரவு 03.04மணிவரை
சுபநேரம்12.23 -1.53மணிவரை
இராகுகாலம் 7.53 - 9.23மணிவரை

ஏகாதசி விரதம்
சந்திராஷ்டமம்-
மூலம்

**வளவன்**




வெளியூர்த் தொடர்புகள் அனுகூலம் தரும், சுப நிகழ்வுகளில் கலந்து கொள்ள அழைப்புகள் வந்து சேரலாம், சிந்தனை ஆற்றலால் சிறப்படைவீர்கள்.




செய் தொழிலை விரிவுபடுத்தும் எண்ணம் மேலோங்கும் நாள், செயற்பாடுகளில் உற்சாகம் காட்டுவீர்கள், நினைத்ததை முடித்து நிம்மதி காணும் நாள்.




குடும்பத்தில் குதூகலம் தரும் சம்பவங்கள் இடம்பெறலாம், உன்னதமான வாழ்வுக்கு அடித்தளம் அமைக்கும் நாள், நாவன்மையால் நல்ல பெயர் கிடைக்கும்.




வீட்டுத் தேவைகளைப் பூர்த்தி செய்து கொள்ளும் எண்ணம் உருவாகும்,வழிபாட்டால் ஆனந்தம் காண வேண்டிய நாள், எப்படி நடக்குமோ என நினைத்த காரியம் நல்ல விதமாக அமையும்.




சந்தித்த நபர்களால் சந்தோசம் கிடைக்கும், திடீர் பயணமொன்று இடம்பெறலாம், மனச் சஞ்சலங்கள் சற்று அதிகரிக்கலாம், சுப விரயங்களில் தாராளம் காட்டுவீர்கள்.




குடும்பத்தில் குதூகலம் தரும் சம்பவங்கள் இடம்பெறலாம், பொருளாதார நிலையில் திருப்தி காணும் நாள், வருங்கால நலன் கருதி எடுத்த முயற்சிகள் கை கூடும்.




குடும்பத்தினரின் ஒத்துழைப்பால் தொழிலில் முன்னேற்றம் காண்பீர்கள்,பிரியமான சிலரின் சந்திப்பு இடம்பெறலாம், எடுத்த காரியங்களில் எளிதில் முன்னேற்றம் காண்பீர்கள்.




தடைப்பட்ட காரியங்களில் முன்னேற்றம் காணும் நாள், பொது வாழ்வில் புகழ் கூடும், சுறுசுறுப்போடு செயற்படும் நாள், விருந்துகளில் கலந்து மகிழும் வாய்ப்புண்டு.




மறதியால் சில தொல்லைகளுக்கு ஆட்பட நேரிடலாம், தொழிலில் போட்டிகள் அதிகரிக்கலாம், பொது வாழ்வில் வீண் பழிகள் ஏற்படாமல் பார்த்துக் கொள்வது நல்லது.




நட்பு வட்டம் விரிவடையும் நாள், விட்டுப் போன உறவுகள் மீண்டும் வந்து சேரலாம், புதிய பொருட்களை வாங்கி மகிழும் வாய்ப்புண்டு, போசன சுகமுண்டு.




குடும்பத்தில் ஏற்பட்ட கருத்து முரண்பாடுகள் அகலும், தெய்வீக சிந்தனை மேலோங்கும் நாள், தன்னம்பிக்கை அதிகரிக்கும் நாள், மறைமுகப்போட்டிகள் மாறும்.




பிள்ளைகளின் நலன் கருதி எடுத்த முயற்சிகள் கை கூடும், தொலைபேசி வழியில் பொன்னான செய்திகள் வந்து சேரலாம், தடைப்பட்ட காரியங்களில் முன்னேற்றமுண்டு.

**ஆற்றலை வெளிப்படுத்தும் வாய்ப்பு இல்லாவிட்டால் அந்த ஆற்றல் மதிப்பற்றதாகிவிடும்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிறுபோகத்தில் நவீன முறைகளை கையாள ஆராய்வு

(கிளிநொச்சி)

வடக்கு மாகாண சிறுபோக பயிர்ச்செய்கையில் நவீன முறைகளைப் பயன்படுத்துதல் தொடர்பான கலந்துரையாடல் கிளிநொச்சி மாவட்டச் செயலக மாநாட்டு மண்டபத்தில் நேற்று முன்தினம் நடைபெற்றது.

இதன்போது கருத்துரைத்த வடக்கு ஆளுநர் நா.வேதநாயகன், கட்டடங்கள் அமைப்பதை விட விவசாயிகளின் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்துவதே முக்கியமானது.

விவசாயிகளுக்கு எத்தகைய பயிர் இனங்களை நடுகை செய்தால் கூடுதல் வருமானம் கிடைக்கும், குறைந்த உற்பத்திச் செலவில் அதிகளவு விளைச்சலைப் பெற்றுக் கொள்ளக் கூடிய இனம் எது என்பன தொடர்பில் எங்கள் அதிகாரிகள் அறிவூட்ட வேண்டும்.

நாங்கள் காலத்துக்கு ஏற்ப நவீன முறைகளையும் விவசாயத்தில் பயன்படுத்த வேண்டும். பாரம்பரிய முறையில் விளைச்சல்களை அதிகளவில் பெற்றுக்கொள்ள முடியாத நிலைமையும் இருக்கின்றது. உதாரணமாக கடந்த காலத்தில் வடக்கு மாகாணத்தில் சில இடங்களில் இயந்திரம் மூலமான நெல் நாற்று நடுகை செய்யப்பட்டது. அதன் ஊடாக வழமைக்கு மாறான விளைச்சல் பெறப்பட்டுள்ளது.

எதிர்காலத்தில் இவ்வாறு இயந்திரம் மூலமான நெல் நாற்று நடுகை செய்யப்பட்டால் கூடிய விளைச்சல் மாத்திரமல்ல தற்போதைய காலநிலை மாற்றத்தையும் எதிர்கொள்ளக் கூடியதாக இருக்கும். இவ்வாறான விடயங்களை விவசாயிகளும் புரிந்துகொள்ள வேண்டும்.


அதேவேளை செயற்கை உரப் பாவனையைக் குறைத்து இயற்கைப் பசளைகளை அதிகளவில் பயன்படுத்துவதை ஊக்குவிக்கவேண்டும். மண் இல்லாது போனால் - மண் வளம் குன்றிப்போனால் விளைச்சல் இல்லாது போய் விடும்.

எனவே எதிர்காலத்தையும் கருத்தில்கொண்டு விவசாயிகள் குறைந்த செலவில், கூடிய விளைச்சலைப் பெற்றுக்கொள்ளும் பயிரினங்களை நடுகை செய்ய வேண்டும் என ஆளுநர் இதன்போது வலியுறுத்தினார்.

இந்த நிகழ்வில் வடக்கு மாகாண பிரதம செயலர், கிளிநொச்சி மாவட்ட மேலதிக மாவட்டச் செயலர், வடக்கு மாகாண விவசாய அமைச்சின் செயலர், விவசாயப் பணிப்பாளர், ஒவ்வொரு மாவட்டத்தினதும் பணிப்பாளர்கள், வடக்கு மாகாண நீர்ப்பாசனத் திணைக்களப் பணிப்பாளர், மாவட்ட நீர்ப்பாசனத் திணைக்களப் பணிப்பாளர்கள், விவசாய அமைப்புகளின் பிரதிநிதிகள் ஆகியோர் கலந்துகொண்டனர். (6-8)

# கடுகதி தபால் சேவை

## நாடளாவிய ரீதியில் முன்னெடுப்பு






(யாழ்ப்பாணம்)


இலங்கை தபால் திணைக்களத்தால் வெளிநாடுகளுக்கான கடுகதி தபால் சேவை நாடு பூராகவும் நேற்று முன்தினம் ஆரம்பித்து வைக்கப்பட்டுள்ளது.

இதனை முன்னிட்டு நாடு தழுவிய விற்பனை ஊக்குவிப்பு நிகழ்ச்சித் திட்டம் முன்னெடுக்கப்பட்டு வருகின்றது. அந்த வகையில், யாழ்ப்பாணம், முல்லைத்தீவு, வவுனியா பிரதான தபால் நிலையத்தில் குறித்த நிகழ்ச்சித் திட்டம் நேற்று முன்தினம் ஆரம்பித்து வைக்கப்பட்டது.

இச்சேவை மூலம் பொருட்கள் ஆவணங்கள், தபால் போன்றவற்றை அரச பாதுகாப்புடனும், விரைவாகவும், குறைந்த கட்டணத்திலும் வெளிநாடுகளுக்கு அனுப்பி வைக்கலாம் என விழிப்புணர்வு துண்டு பிரசுரங்களும் விநியோகிக்கப்பட்டது.

சர்வதேச கடுகதி தபால் சேவையான (இ.எம்.எஸ்) மூலம் இலங்கை உள்ளிட்ட 48 நாடுகள் பொருட்களை பரிமாற்றிக் கொள்கின்றமை குறிப்பிடத்தக்கது. (6-8-33-250)

# யாழ். மாவட்ட செயலகத்தில் இடம்பெற்ற தொழிற்சந்தை



(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாண மாவட்ட செயலகமும் மனிதவலு வேலைவாய்ப்புத் திணைக்களமும் இணைந்து நடத்திய மாபெரும் தொழிற் சந்தை நிகழ்வானது மேலதிக அரசாங்க அதிபர் (காணி) திரு.க.ஸ்ரீமோகனன் தலைமையில் நேற்று முன்தினம் காலை 8.30 மணி முதல் பிற்பகல் 1.30 மணிவரை மாவட்ட செயலகத்தில் நடைபெற்றது .

இந் நிகழ்வில் தனியார் உற்பத்தி நிறுவனங்கள், ஆடை உற்பத்தித் துறை, பாதுகாப்புச் சேவை, தாதியர் வேலைவாய்ப்பு, ஹோட்டல் துறை, கணக்கியல் மற்றும், காப்புறுதித் துறை, வெளிநாட்டு வேலைவாய்ப்பு மற்றும் சந்தைப்படுத்தல் துறை போன்ற தொழில் வெற்றிடங்களிற்கான ஆட்சேர்ப்பதற்கான நிறுவனங்கள் மற்றும் கணினித் துறை, தாதியர் பயிற்சி நெறி, கப்பல் துறை ஹோட்டல் முகாமைத்துவம் போன்ற பாட நெறிகளை நடாத்தும் நிறுவனங்கள் மற்றும் சுயதொழில் ஊக்குவிப்பு மற்றும் வங்கிக் கடன் வசதிகளை வழங்கும் நிதி நிறுவனங்கள் போன்றவை உள்ளடக்கிய வகையில் தொழிற் சந்தை நடைபெற்றது.

குறித்த தொழிற் சந்தையில் 400 இற்கு மேற்பட்ட தொழில் தேடுவோர்கள் தமது விண்ணப்பங்களை சமர்ப்பித்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (6-8-33)

# சட்டவிரோத விகாரைக்கெதிராக தையிட்டியில் போராட்டம்

## தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி அழைப்பு

(யாழ்ப்பாணம்)

தையிட்டி சட்ட விரோத விகாரைக்கு எதிராக எதிர்வரும் 12,13 ஆம் திகதிகளில் போராட்டம் முன்னெடுக்கப்படவுள்ளதாக தமிழ்த்தேசிய மக்கள் முன்னணியினர் அழைப்பு விடுத்துள்ளனர்.

எதிர்வரும் 12 ஆம் திகதி புதன்கிழமை மாலை 4 மணிக்கு போராட்டம் ஆரம்பமாகி மறுநாள் 14 ஆம் திகதி வியாழக்கிழமை மாலை 6.30 மணிக்கு நிறைவடையும்.

எனவே அனைத்து கட்சியினரையும் பொதுமக்களையும் ஆதரவாளர்களையும் சட்ட விரோத விகாரைக்கெதிரான போராட்டத்தில் கலந்து கொண்டு வலுச்சேர்க்குமாறு தமிழ்த்தேசிய மக்கள் முன்னணியின் செயலாளர் செல்வராசா கஜேந்திரன் கேட்டுள்ளார். (6-8)

# கற்கை நெறிகளுக்கான விண்ணப்பங்கள் கோரல்

(யாழ்ப்பாணம்)

இலங்கை திறந்த பல்கலைக்கழகத்தினால் நடத்தப்படும் உயிரியல் விஞ்ஞானமானி மற்றும் பௌதீக விஞ்ஞானமானி கற்கைநெறிக்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

இக்கற்கை நெறிக்கு விண்ணப்பிக்க விரும்புவோர் கல்விப் பொதுத்தராதர உயர்தர பரீட்சையில் மூன்று பாடங்களில் கணித அல்லது உயிரியல் பிரிவில் ஒரே அமர்வில் ஒன்றுக்கு மேற்பட்ட அமர்வுகளில் மூன்று பாடங்களில் சித்தி பெற்றிருந்தாலும் விண்ணப்பிக்க முடியும்.

விண்ணப்பப்படிவங்களை www.ou.ac.lk என்னும் இணையத்தள முகவரியில் பிரவேசித்து எதிர்வரும் 09.04.2025 வரை விண்ணப்பிக்க முடியும்.

மேலதிக விபரங்களிற்கு யாழ்.பிராந்திய நிலையம் பிறவுண் வீதி கொக்குவில் என்னும் முகவரியூடாகவும் அல்லது 021222 3374 தொலைபேசியூடாகவும்தொடர்புகொண்டு விண்ணப்பிக்க முடியும் என யாழ்.பிராந்திய நிலைய பணிப்பாளர் கே.கந்தசுவாமி அறிவித்துள்ளார். (6-8)

# கரப்பந்தாட்ட கால் இறுதியாட்டம்

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாவட்ட கரப்பந்தாட்ட சங்கம் நடத்தும் 'A' பிரிவுக்கான கரப்பந்தாட்ட கால் இறுதி ஆட்டத்தின் 2 ஆம் நாள் போட்டி இன்று திங்கட்கிழமை அச்சுவேலி விக்னேஸ்வர வி.க மைதானத்தில் இடம்பெறவுள்ளது.

இரவு 7 மணிக்கு இடம்பெறவுள்ள போட்டியில் ஐக்கிய வி.க தொண்டைமனாறு, ஆவரங்கால் மத்தியும் மோதவுள்ளன.

அதேவேளை இரவு 8 மணிக்கு இடம்பெறவுள்ள பிறிதொரு ஆட்டத்தில் உடுப்பிட்டி நவசக்தி, அச்சுவேலி யூத் அணிகள் விளையாடவுள்ளன. (6-8)



உடுப்பிட்டி நாவலடி முன்பள்ளி சிறுவர்களின் சிறுவர் சந்தை உடுப்பிட்டி நாவலர் சனசமூக நிலையத்தில் கடந்த வெள்ளிக்கிழமை நிலையத் தலைவர் இ.ரவிபாலச்சந்திரன் தலைமையில் இடம்பெற்றது.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# Institute Of Junior

## Spoken & Written Elocution

**பரீட்சையில் 100 புள்ளிகளை பெற்ற 60 மாணவர்களை பாராட்டுகின்றோம்**



T.ஜதுஜன், T.ஜருசன், K.ஷரத், P.அஷ்வின், M.பிரீத்திகா, G.சந்தோஷி, S.கனிஷ்யா, S.கம்ஷிகா, S.ஜிதுசியன், S.கருஷ்ணி

R.கஷ்மிகா, S.ஜெனிஷா, A.அஸ்விகன், N.கிருஸ்னிகா, R.வர்ணிகா, K.மித்ரா, M.சாகித், S.அபிஷ்ணன், S.கனிஸ்ரிகா, K.ஆதுலன்

V.ரிஷிகா, J.சஷ்விகா, M.வர்ஷா, S.அர்விந்த், R.பிரீத்விக், K.நதீஷா, K.ஷிருஸ்ரிஹரன், K.ஹரிணி, V.வைஷ்ணவின், T.கேசகி

T.யாழோவியன், S.ஹர்ஷா, S.தேஜஸ்வி, S.சன்ஜிற்ரா, S.கிஷான்ராஜ், R.ஆத்விக், P.பிரக்கியா, P.ஜஸ்வினி, P.ஆருஷன், P.அனன்யா

P.அகர்ணீஷ், P.அக்ஷயா, N.இலக்கியா, N.இலக்கணா, M.ஹரினேஸ், M.நிக்சிகா, S.சாதுரியா, A.ஆதனா, J.அஷ்மிகா, S.சகீஷன்

S.சதிக்ஷா, U.காருண்யா, U.லிசாதனா, S.டயனிகா, G.பவனேஸ், G.மகதீஸ், K.அனாமிகா

D.ரேணுகா

S.லோஜிகன்

M.நிருஷிகா

**ஆசிரியர்:**
**திருமதி.**
**பிரகாஷ் சுமிதா**
**077 199 9630**

Elocution Classes **எலக்கியூசன் வகுப்புக்கள்** ( Spoken & Written) **4 வயதிலிருந்து 14 வயதுவரை**
English Classes **(ஆங்கில வகுப்புக்கள்)**

**இல.928, பருத்தித்துறை வீதி, நல்லூர். (சட்டநாதர் கோயில் முன்) 077 199 9630**


## தமிழரசுக் கட்சியின் அலுவலகம் வவுனியாவில் திறந்து வைப்பு

(குருமன்காடு)

இலங்கை தமிழரசுக் கட்சியின் மாவட்ட அலுவலகமும் வன்னி பாராளுமன்ற உறுப்பினர்களின் மக்கள் தொடர்பாடல்காரியாலயமும் வவுனியா, குருமன்காடு காளிகோவில் வீதியில் நேற்றுத் திறந்து வைக்கப்பட்டது.

இந்நிகழ்வில் அதிதிகளாகக் கலந்து கொண்ட கட்சியின் பதில் தலைவர் சீ.வீ.கே. சிவஞானம், செயலாளர் எம்.ஏ. சுமந்திரன், பாராளுமன்ற உறுப்பினர் ப.சத்தியலிங்கம் ஆகியோர் புதிய அலுவலகத்தை நாடாவெட்டி திறந்து வைத்தனர்.

இதன்போது கட்சியின் பிரதேசக் கிளைகளுக்கு பொறுப்பானவர்கள் மற்றும் மகளிர் அணி செயற்பாட்டாளர்கள் ஆகியோருக்கான நியமனக் கடிதமும் வழங்கி வைக்கப்பட்டது.

இதன்போது பாராளுமன்ற உறுப்பினர்களான து.ரவிகரன், க.கோடீஸ்வரன், ஞா.சிறிநேசன், குகதாசன், சிறிநாத், இ.சாணக்கியன் மற்றும் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர்கள், கட்சியின் மத்தியகுழு உறுப்பினர்கள், மாவட்டகிளையினர் என பலர் கலந்துகொண்டனர். (6-8-250)

## யாழ்.நாட்டார் வழக்கியற்கழகம் நடத்தும் இசை, நாடக பயிலரங்கு

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் நாட்டார் வழக்கியற் கழகம் நடத்தும் இசை நாடகப் பயிலரங்கு எதிர்வரும் 13 ஆம் திகதி வியாழக்கிழமை இடம்பெறவுள்ளது.

காலை 8 மணி தொடக்கம் பி.ப 1.30 மணி வரை இணுவில் கந்தசாமி கோவில் அருகாமையில் உள்ள இளந்தொண்டர் சபை மண்டபத்தில் நடைபெறவுள்ளமையால் ஆர்வமுடையவர்கள் நாளை செவ்வாய்க்கிழமைக்கு முன்பாக 077 864 5971 என்னும் வட்ஸ் அப் இலக்கத்தினூடாகப் பதிவுகளை மேற்கொள்ள முடியும் என ஏற்பாட்டாளர்கள் அறிவித்துள்ளனர். (6-8)


## பெயர் மாற்ற அறிவித்தல்

வியாபாரி மூலை பருத்தித்துறையைச் சேர்ந்த விக்ரர் குணராசா (Nic-No-198319304077) ஆகிய நான் இன்று முதல் எனது பெயரை விக்ரர் அன்ரன் குணராசா என மாற்றிக் கொண்டுள்ளேன் எனவும் இனிமேல் சகல ஆவணங்களிலும் எனது புதிய பெயரையே பயன்படுத்துவேன் எனவும் அவ்வாறே கையொப்பம் இடுவேன் எனவும் இத்தால் இலங்கை சனநாயக சோசலிச குடியரசிற்கும் மக்களுக்கும் அறியத் தருகின்றேன்.


**உண்மையுள்ள**
**விக்ரர் அன்ரன் குணராசா**

(C-2418)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பாரதம்

# கட்டாய இராணுவப் பயிற்சி
# போலந்து அதிரடி அறிவிப்பு



(வார்ஷோ)


போலந்தில் அனைத்து ஆண்களையும் இராணுவப் பயிற்சிக்கு உட்படுத்தும் வேலைத் திட்டங்கள் இடம்பெற்று வருவதாக அந் நாட்டின் பிரதமர் டொனால்ட் டஸ்க் தெரிவித்துள்ளார்.

போலந்து நாட்டின் பாதுகாப்பை வலுப்படுத்தும் நோக்கில் இந்தத் தீர்மானம் எட்டப்பட்டதாகவும் அனைத்து வயது வந்த போலந்து ஆண்களுக்கும் கட்டாய இராணுவப் பயிற்சி அளிக்கப்படும் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

போர் நிலைமை ஏற்படுமாயின் ஒவ்வொரு ஆணும் தயாராக இருக்க வேண்டும் என்பதே இதன் நோக்கமாகும் எனவும் இந்த ஆண்டு இறுதிக்குள் இதற்கான மாதிரித் திட்டம் தயாரிக்கப்படும் எனவும், இதன் மூலம் நாட்டில் இராணுவத்தின் தயார்நிலை உறுதி செய்யப்படும்' எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

மேலும், உக்ரைன் மற்றும் ரஷ்யா நாடுகளில் தற்போது 1.3 மில்லியன் இராணுவ வீரர்கள் இருக்கின்றனர் எனவும் ஆனால் போலந்தில் 2 இலட்சம் இராணுவ வீரர்களே உள்ளனர் எனவும், தற்போதுள்ள இரண்டு இலட்சம் வீரர்களை 5 இலட்சமாக அதிகரிப்பதே இத் தீர்மானத்தின் நோக்கம் எனவும் டொனால்ட் டஸ்க் தெரிவித்துள்ளார். (நி-8)

# ரஷ்யா மீது பொரு
# புடினுக்கு விழப்பே



## ட்ரம்பின் அடுத்து

**(வோஷிங்டன்)**


**உக்ரைனுடன் அமைதி ஒப்**
**ரஷ்யா மீது மிகப்**
**பொருளாதாரத் தடைகளை**
**களையும் விதிக்கப் போ**
**ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப்**
**சர்வதேச ஊடகங்கள் செய்த**

ஜனாதிபதியாகப் பதவியேற்றதிலிருந்து ரஷ்யாவுக்கு ஆதரவான கருத்துக்களை முன்வைத்திருந்த டொனால்ட் ட்ரம்ப் செய்தியாளர்களிடம் கருத்துரைத்த போது குறித்த விடயத்தை குறிப்பிட்டுள்ளார்.

உக்ரைனின் வலுசக்தி அமைப்புகளை இலக்கு வைத்து ரஷ்யா கடந்த வெள்ளிக்கிழமை தாக்குதலை நடத்தியிருந்தது.

இதற்குப் பதிலளிக்கும் வகையிலேயே ரஷ்யா மீது

# அணுசக்தி ஒப்பந்தம்
## ட்ரம்ப் மிரட்டலுக்கு பயப்பட மாட்டோம்
### அயதுல்லா அலி எச்சரிக்கை



(டெஹ்ரான்)

அமெரிக்கா-ஈரான் இடையே மோதல் போக்கு இருந்து வருகிறது. குறிப்பாக அணுசக்தி ஒப்பந்தம் தொடர்பாக பிரச்சினை இருந்து வருகிறது. இதற்கிடையே அணுசக்தி ஒப்பந்தம் குறித்து பேச்சுவார்த்தை நடத்த ஈரானுக்கு அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் கடிதம் எழுதி உள்ளார்.

இது தொடர்பாக ட்ரம்ப் கூறும்போது, "ஈரானுக்கு நான் கடிதம் எழுதியுள்ளேன். அவர்கள் பேச்சுவார்த்தைக்கு மறுத்தால் நாம் இராணுவத்தைப் பயன்படுத்த வேண்டியிருக்கும்" எனக் கூறினார்.

இந்த நிலையில் ட்ரம்ப் மிரட்டலுக்குப் பயப்படமாட்டோம் என்று ஈரானின் உச்ச தலைவர் அயதுல்லா அலி கமேனி தெரிவித்து உள்ளார். இதுகுறித்து அவர் கூறியதாவது,

சில மிரட்டல் அரசாங்கங்கள் பேச்சுவார்த்தையை வலியுறுத்துவது பிரச்சினைகளைத் தீர்ப்பதற்காக அல்ல. அவர்களின் புதிய கோரிக்கைகளை முன்வைப்பதற்கான ஒரு பாதையாகும்.

ஈரானால் நிச்சயமாக ஏற்றுக்கொள்ளப்படாத புதிய கோரிக்கைகளை அவர்கள் எழுப்புகிறார்கள். அவர்களின் எதிர்பார்ப்புகளை ஈரான் நிச்சயமாக ஏற்காது.

பேச்சுவார்த்தைகளில் ஈரானை மிரட்ட முடியாது. வற்புறுத்தல் மற்றும் மிரட்டலுக்கு எதிராக நிற்போம் என அவர் கூறினார்.

ஈரான் மீதான பொருளாதாரத் தடைகளை நீக்க கடந்த 2015ஆம் ஆண்டு சர்வதேச நாடுகள் இணைந்து கொண்டுவந்த ஒப்பந்தத்தில் ஈரானின் அணுசக்தித் திட்டங்களுக்குத் தடை விதிக்கப்பட்டது.

கடந்த 2018 ஆம் ஆண்டு இந்த ஒப்பந்தம் பலவீனமானது எனக் கூறி அமெரிக்கா விலகியது.

அதன்பின் ஈரான் ஒப்பந்தத்தில் இருந்த உறுதிமொழிகளைத் திரும்பப் பெறத் தொடங்கியது.

இந்த நிலையில், அணு ஆயுத உற்பத்தியை ஈரான் அதிகரித்திருப்பதாக எழுந்த குற்றச்சாட்டுகளைத் தொடர்ந்து அமெரிக்க ஜனாதிபதியாக மீண்டும் பதவியேற்ற ட்ரம்ப் அவர்களுக்கு கடுமையான அழுத்தம் கொடுக்கப்படும் எனத் தெரிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

# உக்ரைன்
# ரஷ்யா தாக
## 25 பேர் உயி

(கீவ்)

உக்ரைனின் கிழக்குப் பகுதியான டொனேட்ஸ்க் பிராந்தியத்தில் உள்ள டோப்ரோபில்லாவில் ரஷ்யப் படைகள் இரவு முழுவதும் நடத்திய தாக்குதலில் 25 பேர் கொல்லப்பட்டனர். 30இற்கும் மேற்பட்டோர் காயம் அடைந்தனர்.

இதனை உக்ரைனின் அவசர சேவைகள் துறை உறுதி



செய்து தெரிவித்துள்ளது.

மேலும், இந்தத் தாக்குதலில் 5 மாடிகள் கொண்ட 8 அடுக்கு மாடி குடியிருப்பு கட்டடங்கள், ஒரு நிர்வாக கட்டடம், 30 கார்கள் சேதமடைந்துள்ளன என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அமைதியை விரிவுபடுத்த அமெரிக்காவுடன் இணைந்து பணியாற்றுகிறோம் என்று உக்ரைன் ஜனாதிபதி ஜெலன்ஸ்கி தெரிவித்த நிலையில், இந்த இரவு நேரத் தாக்குதல் நடந்துள்ளது. உக்ரைன் ஜனாதிபதி ஜெலன்ஸ்கி தனது எக்ஸ் பக்கத்தில் வெளியிட்ட பதிவில், "எங்களைப் போலவே அமைதியை விரும்பும் கூட்டாளிகளுடன் இணைந்து தேவையான நடவடிக்

கைக
வருக
அ
அமெ
யாவி
இருக்
வுபடு
அடித்
ஒரு
செய்
ட்ரம்
வேறு
பணி




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ருளாதார தடை ப்போகும் பேரிடி!

## டுத்த கட்ட நகர்வு

**மதி ஒப்பந்தம் ஏற்படும் வரை, மிகப் பெரிய அளவில் டைகளையும், அதிகளவு வரி ப் போவதாக அமெரிக்க ட் ட்ரம்ப் தெரிவித்துள்ளதாக ர் செய்தி வெளியிட்டுள்ளன.**




ந்த வெள் க்குதலை

லளிக்கும் ஷ்யா மீது பொருளாதாரத் தடைகள் மற்றும் வரிகளை விதிப்பது தொடர்பில் பரிசீலிப்பதாக அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் தெரிவித்துள்ளார்.

அதேநேரம், ரஷ்யாவின் தாக்குதல் நடவடிக்கைகளை ஏற்றுக் கொள்ள முடியாது எனவும் அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் குறிப்பிட்டுள்ளார்.

(நி-8)

# நிலவில் உறைபனி இஸ்ரோ அறிவிப்பு



(டில்லி)

கடந்த 2023ஆம் ஆண்டு ஒகஸ்ட் 23ஆம் திகதி இந்திய விண்வெளி ஆய்வு மையத்தால் ஏவப்பட்ட சந்திராயன்-3 விண்கலம், நிலவின் தென் துருவத்திற்கு அருகில் தரையிறங்கியது.

நிலவில் சந்திராயன்-3 தரையிறங்கிய இடத்திற்கு "சிவசக்தி" என்று பெயரிடப்பட்டது.

இந்த விண்கலம் மூலம் நிலவின் மேற்பரப்பு குறித்த தரவுகள் சேகரிக்கப்பட்டு இஸ்ரோ விஞ்ஞானிகளால் ஆய்வு செய்யப்பட்டு வருகின்றது.

இந்த நிலையில், சந்திராயன்-3 விண்கலம் நிலவின் மேற்பரப்பின் அடிப்பகுதியில், உறைபனி இருப்பதை உறுதி செய்திருப்பதாக இஸ்ரோ தெரிவித்துள்ளது.

மேலும் முன்பு கணிக்கப்பட்டதை விட நிலவின் மேற்பரப்பிற்கு அடியில் அதிக இடங்களில் பனிக்கட்டி இருக்கக்கூடும் என்று விஞ்ஞானிகள் கூறுகின்றனர்.

மேற்பரப்பு வெப்பநிலையில் ஏற்படும் மாற்றங்கள் பனியின் உருவாக்கத்தை நேரடியாகப் பாதிக்கலாம் என்றும், இது குறித்து மேலும் ஆய்வு செய்வதன் மூலம் நிலவில் உறைபனி ஏற்பட்ட காரணத்தை கண்டறிய முடியும் என விஞ்ஞானிகள் தெரிவித்துள்ளனர். . (நி-8)

# ரன் மீது தாக்குதல்

## ர் உயிரிழப்பு



கைகளில் கவனம் செலுத்தி வருகிறோம்.

அடுத்த வாரம், ஐரோப்பா, அமெரிக்கா, சவுதி அரேபியாவில் நிறைய வேலைகள் இருக்கும். அமைதியை விரிவுபடுத்தவும், பாதுகாப்புக்கான அடித்தளத்தை வலுப்படுத்தவும் ஒரு கூட்டத்துக்கு ஏற்பாடுகள் செய்து வருகிறோம். இன்று ட்ரம்ப் குழுவினருடன் பல்வேறு மட்டங்களில் தீவிரமான பணிகளில் ஈடுப்பட்டோம். நோக்கம் மிகவும் தெளிவாக இருக்கிறது விரைவில் அமைதி, நம்பகமான பாதுகாப்பே அது. ஒரு ஆக்கபூர்மான அணுகுமுறைக்கு உக்ரைன் உறுதி பூண்டுள்ளது. உதவி செய்து வரும் அனைவருக்கும் எனது நன்றிகள்" என்று தெரிவித்துள்ளார்.

இந்த நிலையில், உக்ரைன் ஜனாதிபதி ஜெலன்ஸ்கி இன்று திங்கள் கிழமை சவுதி அரேபியாவுக்கு சென்று பட்டத்து இளவரசர் மெகம்மது பின் சல்மானுடன் பேச்சுவார்த்தை நடத்துவார் என்று எதிர்பார்க்கப் படுகிறது. அதேபோல் பெப்ரவரி இறுதியில் ட்ரம்ப் மற்றும் ஜெலன்ஸ்கி இடையே நடந்த பேச்சுவார்த்தையில் மோதல் ஏற்பட்ட நிலையில், வரும் செவ்வாய்க் கிழமை உக்ரைன் அதிகாரிகள் அமெரிக்க அதிகாரிகளுடன் புதிய பேச்சுவார்த்தை நடத்துவார்கள் என்று எதிர்பார்க்கப் படுகிறது. (நி-8)

லன்
ில்,
தல்
ரன்
னது
பிட்ட
வே
கூட்
ந்து
டிக்



# சிரியாவில் உள்நாட்டுக் கலவரம் ஆயிரம் பேர் உயிரிழப்பு!

(டமாஸ்கஸ்)

சிரியாவில் 2 நாட்களாக நடந்த உள்நாட்டு கலவரத்தில் ஆயிரத்திற்கும் மேற்பட்டோர் கொல்லப்பட்டனர்.

சிரியாவில் 2011 ஆம் ஆண்டு முதல் உள்நாட்டு போர் நடந்து வருகிறது. அந்நாட்டின் முன்னாள் ஜனாதிபதி பஷார் அல்-ஆசாத், ரஷ்யா மற்றும் ஈரானுக்கு ஆதரவாக செயற்பட்டதால் அமெரிக்கா, துருக்கி ஆகிய நாடுகள், அவருக்கு எதிராக உள்நாட்டு கிளர்ச்சிப் படைகளைத் தூண்டிவிட்டன. ரஷ்ய இராணுவம் உக்ரைனுக்கு எதிரான போரில் ஈடுபட்டுள்ளதால், சிரியாவுக்கு அவர்களால் உதவ முடிய வில்லை.

இந்த வாய்ப்பைப் பயன்படுத்தி துருக்கி ஆதரவுடன் புதிதாக உருவான கிளர்ச்சிப்படை முழுவீச்சில் தாக்குதலில் இறங்கியது. தலைநகர் டமாஸ்கஸ் உள்ளிட்ட முக்கிய நகரங்களைக் கைப்பற்றியது.



இதனால் ஜனாதிபதி பஷார் அல் ஆசாத் ரஷ்யாவுக்குச் சென்று தஞ்சமடைந்தார். கிளர்ச்சிப் படையைச் சேர்ந்த அஹ்மத் அல்-ஷரா, சிரியாவின் இடைக்கால ஜனாதிபதியாகப் பொறுப்பேற்றுள்ளார்.

ஆனால் சிரியாவின் கடலோர நகரங்கள் இன்னும் ஆசாத் விசுவாசிகளின் கட்டுப்பாட்டில் உள்ளன. அங்கு அரசு படையினருக்கும் ஆசாதின் விசுவாசிகளுக்கும் இடையே மோதல் ஏற்பட்டது. பல கிராமங்களில் புகுந்து அரசு படையினர் தாக்குதல் நடத்தினர். அவர்களுக்கு ஆயுதம் ஏந்திய ஆசாத் விசுவாசிகள் பதிலடி தந்தனர்.

2 நாட்களாக நடந்த உள்நாட்டுக் கலவரத்தில் ஆயிரத்திற்கும் மேற்பட்டோர் கொல்லப்பட்டனர். அதில் 125 பேர் சிரிய அரசுப் படையைச் சேர்ந்தவர்கள் 148 பேர் ஆசாத் விசுவாசிகள் அடங்குவர். மீதமுள்ளவர்கள் பொது மக்கள் என, சிரிய மனித உரிமைகள் கண்காணிப்பகம் தெரிவித்தது. (நி-8)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


# புதிய சம்பளத்திட்டத்தால்

# அதிபர், ஆசிரிய ஆலோசகர் சேவைகள் பாதிப்பு

பெப்ரவரி மாதம் 17 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்ட வரவு செலவுத் திட்டத்தில் அரசாங்க ஊழியர்களின் அடிப்படை சம்பளமானது 20 மாதங்களில் 65 வீதம் அதிகரிக்கும் சம்பளத் திட்டம் முன்வைக்கப்பட்டுள்ளது. இதை விளங்கிக் கொண்ட அரசாங்க ஊழியர்களுக்கு இது மகிழ்ச்சி தரும் விடயமாக இருந்தாலும் இலங்கை ஆசிரியர் சேவையில் இருந்து போட்டிப் பரீட்சை இலங்கை அதிபர் சேவை நியமனம் பெற்றவர்களும், இலங்கை ஆசிரியர் ஆலோசகர் சேவைக்கு நியமனம் பெற்றவர்களும் தமக்கு உண்டாகப் போகும் பாதிப்புக்கள் தொடர்பாக பலவாறு புகார்கள் தெரிவித்து வருகின்றனர்.

2008.07.01 முதல் இலங்கை அதிபர் சேவைக்கு 3 ஆம் வகுப்பின் மூலமே ஆட்சேர்ப்பு செய்யப்பட்டு வருகின்றது. இலங்கை ஆசிரியர் சேவையின் முதலாம் 2-I, 2-II வகுப்பில் கடமையாற்றி வந்த சுமார் 15,000 ஆசிரியர்கள் 2009, 2010, 2012, 2016, 2019, 2023 ஆம் ஆண்டுகளில் இலங்கை அதிபர் சேவைக்கு நியமனம் பெற்றார்கள். இவர்களில் 2009, 2010, 2012 ஆம் ஆண்டுகளில் நியமனம் பெற்ற பெரும்பாலான அதிபர்கள் பதவி உயர்வு பெற்று 2021 ஆம் ஆண்டளவில் முதலாம் வகுப்புக்குச் சென்றுவிட்டார்கள். 2022.01.01 ஆம் திகதிய சம்பள மாற்றத்தாலும் 2025.04.01 ஆம் திகதி முதல் உண்டாகவுள்ள சம்பள மாற்றத்தாலும் இவர்கள் பெரும்பாலும் பாதிக்கப்படமாட்டார்கள். இவர்களுக்கு உண்டான வருடாந்த சம்பள ஏற்றக் குறைபாடு 03/2014 ஆம் இலக்க கல்வி அமைச்சின் சுற்றறிக்கை மூலம் வழங்கப்பட்ட சீராக்கல் படியானது சரியாகக் கிடைத்து இருந்தால் இவர்களுக்கு பாதிப்பு உண்டாகாது. 2-I, 2-II தரத்தில் இருந்த ஆசிரியர்கள் அதிபர் பதவி பெற்ற பின்னர் தம்மையொத்த ஆசிரியர்கள் 2015 ஆம் ஆண்டுக்குள் முதலாம் வகுப்பு பதவி உயர்வு பெற்றதை வைத்துக் கணக்குப் பார்த்தால் சம்பளம் குறைவது தெரியும்.

2016, 2019, 2023 ஆம் ஆண்டுகளில் மூன்றாம் வகுப்பு நியமனம் பெற்ற அதிபர்கள் இன்று இலங்கை ஆசிரியர் சேவையில் முதலாம் வகுப்பு பதவி உயர்வு பெறும் நிலையில் இருந்தால் 2025 சம்பள அதிகரிப்பானது பாரிய சம்பள முரண்பாட்டைக் காட்டும். இதற்கு மிக முக்கிய காரணம் அவர்களின் வருடாந்த சம்பள படியேற்றம் 1670 ரூபாவாக உள்ள நிலையில் இலங்கை ஆசிரியர் சேவையின் முதலாம் வகுப்பு ஆசிரியர்களின் வருடாந்த சம்பள ஏற்றம் 2940 ரூபாவாகவும், 2-I வகுப்பு ஆசிரியர்களின் வருடாந்த சம்பள ஏற்றம் 2400 ரூபாவாகவும் இருப்பதேயாகும். 2025 ஆம் ஆண்டு சம்பளத் திட்டம் தொடர்பாக வெளியிடப்படவுள்ள சம்பள மாற்றச் சுற்றறிக்கையில் 66/2006 ஆம் இலக்கச் சுற்றறிக்கை 19 பிரிவில் இருந்தது போல இவர்களுக்கு நிவாரணம் அளிக்கும் ஏற்பாடு ஒன்று செய்யப்படாவிட்டால் இந்த மூன்றாம் வகுப்பு அதிபர்களுக்கு உண்டாகும். பாதிப்புக்கு தீர்வு காண முடியாது. போட்டிப் பரீட்சை மூலம் மூன்றாம் வகுப்பு அதிபர் பதவி பெற்றவர்கள் மிக விரக்தி நிலையில் உள்ளதை அவதானிக்கக் கூடியதாகவுள்ளது.



அன்பு ஜவஹர்ஷா

ஒரு பாடசாலையின் முதல் நிரல் முகாமையாளரான அதிபர் அப்பாடசாலையில் கடமையாற்றும் ஆசிரியர்களை விட குறைந்த சம்பளத்தையும், குறைவாக வருடாந்த சம்பள ஏற்றத்தையும் பெறுவது அப்பாடசாலையில் அதிபருக்கு கவலை தரும் விடயமாகவே இருக்கும்.

1994.10.06 முதல் இலங்கை ஆசிரியர் சேவை ஸ்தாபிக்கப்பட்டது முதல் இலங்கை ஆசிரியர் சேவையும், இலங்கை அதிபர் சேவையும் சமாந்தர சேவைகளாகவே இருந்து வருகின்றன. 2008.07.01 இற்கு முன் னர் இலங்கை அதிபர் சேவையில் ஆட்சேர்ப்பு 3 ஆம், 2 ஆம், 1 ஆம் வகுப்புகளுக்கு தனித்தனியாகவே நடைபெற்று வந்தது. தமது ஆசிரியர் தரங்களே சம்பளங்களைக் கருத்தில் கொண்டு புதிய தரங்களுக்கு விண்ணப்பிக்கும் வாய்ப்பு அப்போது இருந்தது. 2008.07.01 முதல் இந்த நிலை இல்லாமல் போனமையால் தான் இந்த சம்பள சிக்கல்களுக்கு அதிபர்கள் உள்ளாக வேண்டிய நிலை உண்டானது. 2024.01.01 முதல் இலங்கை அதிபர் சேவைக்கு சிறந்த பிரமானக் குறிப்பொன்றை அமுல்படுத்த வரைபுகள் தயாரிக்கப்பட்டாலும் அது சாத்தியமாகாத நிலையில் புதிய சம்பள முறையிலும் அதற்கு தீர்வு இல்லாத நிலையில் இந்த பாதிப்புக்கள் தொடர்ந்து கொண்டு இருக்கின்றன.

2022.01.02 முதல் உள்ளீர்ப்பு செய்யப்பட்ட இலங்கை ஆசிரியர் ஆலோசகர் சேவையினரும் இவ்வாறு பாதிக்கப்பட்ட நிலையில் உள்ளார்கள். இன்று 2000 பேர்கள் வரை ஆசிரியர் ஆலோசகர்களாகக் கடமையாற்றி வருகின்றார்கள். இவர்களில் 90 சதவீதமானவர்கள் இலங்கை ஆசி ரியர் சேவையின் முதலாம் வகுப்பில் இருந்து இலங்கை ஆசிரியர் ஆலோசகர் சேவைக்கு உள்ளீர்ப்பு செய்யப்பட்டவர்களாவர். 2022.01.02 என்று இவர்களின் உள்ளீர்ப்பு திகதியை மாற்றி, உள்ளீர்ப்பின் போது மேலதிக வருடாந்த சம்பள ஏற்றப் படியொன்றை வழங்க சீராக்கல் படி மூலம் இவர்களின் சம்பள முரண்பாட்டுக்குத் தீர்வு காண முயற்சிகள் செய்யப்பட்டன. கடந்த ஆண்டு வழக்கொன்றுக்கு வழங்கப்பட்ட தீர்ப்பானது இவர்களின் சம்பள முரண்பாட்டுக்குத் தீர்வு வழங்குமாறு அறிவித்து இருந்தது. ஆனால் புதிய சம்பளத் திட்டத்தில் இவர்களுக்கு எந்தத் தீர்வும் இல்லை என்பதே இவர்களின் புகார் ஆகும்.

ரூபா 1630 வருடாந்த சம்பள ஏற்றத்திற்கு உரித்துடையவர்களுக்கு 1335, 1400 ரூபா என்ற வகையில் 2022 சம்பளத்திட்டம் இருந்தது. இப்போது 2940 ரூபா பெற வேண்டியவர்கள் 2400 ரூபா, 2520 ரூபா பெறும் நிலையே உள்ளது. இவர்களுக்கு 540 ரூபா, 420 ரூபா சீராக்கல்படி வழங்கும் எந்த ஏற்பாடும் புதிய சம்பளத் திட்டத்தில் சேர்க்கப்படவில்லை. வெளியாகவுள்ள புதிய சம்பள மாற்ற அறி வுறுத்தல் சுற்றறிக்கையிலாவது இதற்கு வசதி செய்யப்பட வேண்டும்.

சம்பளக் குறியீடுகளில் GE1, GE2 என்ற ஆசிரியர் சேவையும் GE3, GE4 என்ற குறியீடுகளில் இலங்கை ஆசிரிய ஆலோசகர் சேவை, இலங்கை அதிபர் சேவை ஆகியவை இருப்பது இங்கு குறிப்பிடத்தக்கதாகும். இங்குள்ள அட்டவணைகள் மூலம் மேலும் விபரங்களைத் தெரிந்து கொள்ளலாம்

(தொடர்ச்சி 11 ஆம் பக்கம்)

சம்பள மாற்றியமைப்பு -2025

இலங்கை அதிபர் சேவை -3

| 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 7 |
|---|---|---|---|---|---|---|
| 2025.03.31 அடிப்படைச் சம்பளம் | 2025.04.01 புதிய சம்பளம் | மொத்த அதிகரிப்பு 2-1 | 3- கழித்தல் படிகள் 5,000.00+7,500.00 | 2025.04.01 அடிப்படைச் சம்பளம் | 2026.01.01 அடிப்படைச் சம்பளம் | 2027.01.01 அடிப்படைச் சம்பளம் |
| 42,175.00 | 72,280.00 | 30,105.00 | 17,605.00 | 59,956.50 | 66,118.25 | 72,280.00 |
| 930.00 | 1,670.00 | | | | . | . |
| 43,105.00 | 73,950.00 | 30,845.00 | 18,345.00 | 61,108.50 | 67,529.25 | 73,950.00 |
| 44,035.00 | 75,620.00 | 31,585.00 | 19,085.00 | 62,260.50 | 68,940.25 | 75,620.00 |
| 44,965.00 | 77,290.00 | 32,325.00 | 19,825.00 | 63,412.50 | 70,351.25 | 77,290.00 |
| 45,895.00 | 78,960.00 | 33,065.00 | 20,565.00 | 64,564.50 | 71,762.25 | 78,960.00 |
| 46,825.00 | 80,630.00 | 33,805.00 | 21,305.00 | 65,716.50 | 73,173.25 | 80,630.00 |
| 47,755.00 | 82,300.00 | 34,545.00 | 22,045.00 | 66,868.50 | 74,584.25 | 82,300.00 |
| 48,685.00 | 83,970.00 | 35,285.00 | 22,785.00 | 68,020.50 | 75,995.25 | 83,970.00 |
| 49,615.00 | 85,640.00 | 36,025.00 | 23,525.00 | 69,172.50 | 77,406.25 | 85,640.00 |
| 50,545.00 | 87,310.00 | 36,765.00 | 24,265.00 | 70,324.50 | 78,817.25 | 87,310.00 |
| 51,475.00 | 88,980.00 | 37,505.00 | 25,005.00 | 71,476.50 | 80,228.25 | 88,980.00 |
| 52,405.00 | 90,650.00 | 38,245.00 | 25,745.00 | 72,628.50 | 81,639.25 | 90,650.00 |
| 53,335.00 | 92,320.00 | 38,985.00 | 26,485.00 | 73,780.50 | 83,050.25 | 92,320.00 |
| 54,265.00 | 93,990.00 | 39,725.00 | 27,225.00 | 74,932.50 | 84,461.25 | 93,990.00 |
| 55,195.00 | 95,660.00 | 40,465.00 | 27,965.00 | 76,084.50 | 85,872.25 | 95,660.00 |
| 56,125.00 | 97,330.00 | 41,205.00 | 28,705.00 | 77,236.50 | 87,283.25 | 97,330.00 |
| 57,055.00 | 99,000.00 | 41,945.00 | 29,445.00 | 78,388.50 | 88,694.25 | 99,000.00 |

சம்பள மாற்றியமைப்பு -2025

இலங்கை அதிபர் சேவை -2

| 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 7 |
|---|---|---|---|---|---|---|
| 2025.03.31 அடிப்படைச் சம்பளம் | 2025.04.01 புதிய சம்பளம் | மொத்த அதிகரிப்பு 2-1 | 3- கழித்தல் படிகள் 5,000.00+7,500.00 | 2025.04.01 அடிப்படைச் சம்பளம் | 2026.01.01 அடிப்படைச் சம்பளம் | 2027.01.01 அடிப்படைச் சம்பளம் |
| 48,645.00 | 83,970.00 | 35,325.00 | 22,825.00 | 67,992.50 | 75,981.25 | 83,970.00 |
| 1,335.00 | 2,400.00 | | | | | |
| 50,020.00 | 86,370.00 | 36,350.00 | 23,850.00 | 69,675.00 | 78,022.50 | 86,370.00 |
| 51,355.00 | 88,770.00 | 37,415.00 | 24,915.00 | 71,329.50 | 80,049.75 | 88,770.00 |
| 52,690.00 | 91,170.00 | 38,480.00 | 25,980.00 | 72,984.00 | 82,077.00 | 91,170.00 |
| 54,025.00 | 93,570.00 | 39,545.00 | 27,045.00 | 74,638.50 | 84,104.25 | 93,570.00 |
| 55,360.00 | 95,970.00 | 40,610.00 | 28,110.00 | 76,293.00 | 86,131.50 | 95,970.00 |
| 56,695.00 | 98,370.00 | 41,675.00 | 29,175.00 | 77,947.50 | 88,158.75 | 98,370.00 |
| 58,030.00 | 100,770.00 | 42,740.00 | 30,240.00 | 79,602.00 | 90,186.00 | 100,770.00 |
| 59,365.00 | 103,170.00 | 43,805.00 | 31,305.00 | 81,256.50 | 92,213.25 | 103,170.00 |
| 60,700.00 | 105,570.00 | 44,870.00 | 32,370.00 | 82,911.00 | 94,240.50 | 105,570.00 |
| 62,035.00 | 107,970.00 | 45,935.00 | 33,435.00 | 84,565.50 | 96,267.75 | 107,970.00 |
| 63,370.00 | 110,370.00 | 47,000.00 | 34,500.00 | 86,220.00 | 98,295.00 | 110,370.00 |
| 64,705.00 | 112,770.00 | 48,065.00 | 35,565.00 | 87,874.50 | 100,322.25 | 112,770.00 |
| 66,040.00 | 115,170.00 | 49,130.00 | 36,630.00 | 89,529.00 | 102,349.50 | 115,170.00 |
| 67,375.00 | 117,570.00 | 50,195.00 | 37,695.00 | 91,183.50 | 104,376.75 | 117,570.00 |
| 68,710.00 | 119,970.00 | 51,260.00 | 38,760.00 | 92,838.00 | 106,404.00 | 119,970.00 |
| 70,045.00 | 122,370.00 | 52,325.00 | 39,825.00 | 94,492.50 | 108,431.25 | 122,370.00 |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கோட்டைக்கேணி-அக்கரை வீதி பயன்படுத்த முடியாத நிலையில்

## பார்வையிட்ட ஆளுநர்

(முல்லைத்தீவு)

கொக்குத்தொடுவாய், கோட்டைக் கேணி பிள்ளையார் கோயிலிலிருந்து அக்கரை வெளி வரையில் மிகமோசமாகப் பாதிக்கப் பட்டுள்ள பிரதான வீதியை வடக்கு மாகாண ஆளுநர் நா.வேதநாயகன் நேற்று முன்தி னம் சனிக்கிழமை நேரில் சென்று பார்வை யிட்டார்.

கொக்குத்தொடுவாய், கொக்கிளாய், கரு நாட்டுகேணி ஆகிய கிராமங்களைச் சேர்ந்த மக்களின் 3,000 ஏக்கர் வரையிலான வயல் நிலத்துக்கு உள்ளீடுகளையும், விளைச்ச லையும் கொண்டு சென்று வருவதற்கு பயன்படுத்தும் பிரதான வீதியாக இந்த வீதியே இருந்து வரும் நிலையில் அதைப் பயன்படுத்த முடியாத நிலைமை இருப்பதாக விவசாயிகள் ஆளுநருக்கு இதன்போது சுட்டிக்காட்டினர்.

இந்த வீதியின் சில பாலங்களும் அமைக்கப்படவேண்டியிருப்பதை இந்தச் சந்திப்பில் இணைந்து கொண்ட புதுக் குடியிருப்பு பிரதேச செயலர் ஆர்.விஜயகுமார் ஆளுநருக்கு தெரியப்படுத்தினார். வீதியை அபிவிருத்தி செய்வதற்கும் அத்துடன் பரா மரிப்பது தொடர்பிலும் உரிய நடவடிக்கை எடுப்பதற்காக முல்லைத்தீவு மாவட்டத்தில் தொடர்புடைய திணைக்களங்களுடன் கலந் துரையாடலை விரைவில் நடத்தி முடிவு எடுப்பதாக ஆளுநர் இந்தப் பயணத்தின் போது விவசாயிகளிடம் தெரிவித்தார். (6-8)

(10 ஆம் பக்க தொடர்ச்சி)

சம்பள மாற்றியமைப்பு -2025

இலங்கை அதிபர் சேவை -1

| 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 7 |
|---|---|---|---|---|---|---|
| 2025.03.31 அடிப்படைச் சம்பளம் | 2025.04.01 புதிய சம்பளம் | மொத்த அதிகரிப்பு 2-1 | 3- கழித்தல் படிகள் 5,000.00+7,500.00 | 2025.04.01 அடிப்படைச் சம்பளம் | 2026.01.01 அடிப்படைச் சம்பளம் | 2027.01.01 அடிப்படைச் சம்பளம் |
| 58,345.00 | 101,340.00 | 42,995.00 | 30,495.00 | 79,993.50 | 90,666.75 | 101,340.00 |
| 1,650.00 | 2,970.00 | | | | - | - |
| 59,995.00 | 104,310.00 | 44,315.00 | 31,815.00 | 82,039.50 | 93,174.75 | 104,310.00 |
| 61,645.00 | 107,280.00 | 45,635.00 | 33,135.00 | 84,085.50 | 95,682.75 | 107,280.00 |
| 63,295.00 | 110,250.00 | 46,955.00 | 34,455.00 | 86,131.50 | 98,190.75 | 110,250.00 |
| 64,945.00 | 113,220.00 | 48,275.00 | 35,775.00 | 88,177.50 | 100,698.75 | 113,220.00 |
| 66,595.00 | 116,190.00 | 49,595.00 | 37,095.00 | 90,223.50 | 103,206.75 | 116,190.00 |
| 68,245.00 | 119,160.00 | 50,915.00 | 38,415.00 | 92,269.50 | 105,714.75 | 119,160.00 |
| 69,895.00 | 122,130.00 | 52,235.00 | 39,735.00 | 94,315.50 | 108,222.75 | 122,130.00 |
| 71,545.00 | 125,100.00 | 53,555.00 | 41,055.00 | 96,361.50 | 110,730.75 | 125,100.00 |
| 73,195.00 | 128,070.00 | 54,875.00 | 42,375.00 | 98,407.50 | 113,238.75 | 128,070.00 |
| 74,845.00 | 131,040.00 | 56,195.00 | 43,695.00 | 100,453.50 | 115,746.75 | 131,040.00 |
| 76,495.00 | 134,010.00 | 57,515.00 | 45,015.00 | 102,499.50 | 118,254.75 | 134,010.00 |
| 78,145.00 | 136,980.00 | 58,835.00 | 46,335.00 | 104,545.50 | 120,762.75 | 136,980.00 |
| 79,795.00 | 139,950.00 | 60,155.00 | 47,655.00 | 106,591.50 | 123,270.75 | 139,950.00 |
| 81,445.00 | 142,920.00 | 61,475.00 | 48,975.00 | 108,637.50 | 125,778.75 | 142,920.00 |
| 83,095.00 | 145,890.00 | 62,795.00 | 50,295.00 | 110,683.50 | 128,286.75 | 145,890.00 |
| 84,745.00 | 148,860.00 | 64,115.00 | 51,615.00 | 112,729.50 | 130,794.75 | 148,860.00 |

சம்பள மாற்றியமைப்பு -2025

இலங்கை ஆசிரியர் ஆலோசகர் சேவை - 2

| 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 7 |
|---|---|---|---|---|---|---|
| 2025.03.31 அடிப்படைச் சம்பளம் | 2025.04.01 புதிய சம்பளம் | மொத்த அதிகரிப்பு 2-1 | 3- கழித்தல் படிகள் 5,000.00+7,500.00 | 2025.04.01 அடிப்படைச் சம்பளம் | 2026.01.01 அடிப்படைச் சம்பளம் | 2027.01.01 அடிப்படைச் சம்பளம் |
| 41,385.00 | 70,870.00 | 29,485.00 | 16,985.00 | 58,980.50 | 64,925.25 | 70,870.00 |
| 930.00 | 1,670.00 | | | 13,430.00 | 13,430.00 | 13,430.00 |
| 42,315.00 | 72,540.00 | 30,225.00 | 17,725.00 | 60,132.50 | 66,336.25 | 72,540.00 |
| 43,245.00 | 74,210.00 | 30,965.00 | 18,465.00 | 61,284.50 | 67,747.25 | 74,210.00 |
| 44,175.00 | 75,880.00 | 31,705.00 | 19,205.00 | 62,436.50 | 69,158.25 | 75,880.00 |
| 45,510.00 | 78,280.00 | 32,770.00 | 20,270.00 | 64,091.00 | 71,185.50 | 78,280.00 |
| 46,845.00 | 80,680.00 | 33,835.00 | 21,335.00 | 65,745.50 | 73,212.75 | 80,680.00 |
| 48,180.00 | 83,080.00 | 34,900.00 | 22,400.00 | 67,400.00 | 75,240.00 | 83,080.00 |
| 49,515.00 | 85,480.00 | 35,965.00 | 23,465.00 | 69,054.50 | 77,267.25 | 85,480.00 |
| 50,850.00 | 87,880.00 | 37,030.00 | 24,530.00 | 70,709.00 | 79,294.50 | 87,880.00 |
| 52,185.00 | 90,280.00 | 38,095.00 | 25,595.00 | 72,363.50 | 81,321.75 | 90,280.00 |
| 53,520.00 | 92,680.00 | 39,160.00 | 26,660.00 | 74,018.00 | 83,349.00 | 92,680.00 |
| 54,855.00 | 95,080.00 | 40,225.00 | 27,725.00 | 75,672.50 | 85,376.25 | 95,080.00 |
| 56,190.00 | 97,480.00 | 41,290.00 | 28,790.00 | 77,327.00 | 87,403.50 | 97,480.00 |
| 57,525.00 | 99,880.00 | 42,355.00 | 29,855.00 | 78,981.50 | 89,430.75 | 99,880.00 |
| 58,860.00 | 102,280.00 | 43,420.00 | 30,920.00 | 80,636.00 | 91,458.00 | 102,280.00 |
| 60,195.00 | 104,680.00 | 44,485.00 | 31,985.00 | 82,290.50 | 93,485.25 | 104,680.00 |
| 61,530.00 | 107,080.00 | 45,550.00 | 33,050.00 | 83,945.00 | 95,512.50 | 107,080.00 |
| 62,865.00 | 109,480.00 | 46,615.00 | 34,115.00 | 85,599.50 | 97,539.75 | 109,480.00 |
| 64,200.00 | 111,880.00 | 47,680.00 | 35,180.00 | 87,254.00 | 99,567.00 | 111,880.00 |
| 65,535.00 | 114,280.00 | 48,745.00 | 36,245.00 | 88,908.50 | 101,594.25 | 114,280.00 |

இலங்கை ஆசிரியர் ஆலோசகர் சேவை-1

| 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 7 |
|---|---|---|---|---|---|---|
| 2025.03.31 அடிப்படைச் சம்பளம் | 2025.04.01 புதிய சம்பளம் | மொத்த அதிகரிப்பு 2-1 | 3- கழித்தல் படிகள் 5,000.00+7,500.00 | 2025.04.01 அடிப்படைச் சம்பளம் | 2026.01.01 அடிப்படைச் சம்பளம் | 2027.01.01 அடிப்படைச் சம்பளம் |
| 53,520.00 | 92,680.00 | 39,160.00 | 26,660.00 | 74,018.00 | 83,349.00 | 92,680.00 |
| 1,400.00 | 2,520.00 | | | | - | - |
| 54,920.00 | 95,200.00 | 40,280.00 | 27,780.00 | 75,754.00 | 85,477.00 | 95,200.00 |
| 56,320.00 | 97,720.00 | 41,400.00 | 28,900.00 | 77,490.00 | 87,605.00 | 97,720.00 |
| 57,720.00 | 100,240.00 | 42,520.00 | 30,020.00 | 79,226.00 | 89,733.00 | 100,240.00 |
| 59,120.00 | 102,760.00 | 43,640.00 | 31,140.00 | 80,962.00 | 91,861.00 | 102,760.00 |
| 60,520.00 | 105,280.00 | 44,760.00 | 32,260.00 | 82,698.00 | 93,989.00 | 105,280.00 |
| 61,920.00 | 107,800.00 | 45,880.00 | 33,380.00 | 84,434.00 | 96,117.00 | 107,800.00 |
| 63,320.00 | 110,320.00 | 47,000.00 | 34,500.00 | 86,170.00 | 98,245.00 | 110,320.00 |
| 64,720.00 | 112,840.00 | 48,120.00 | 35,620.00 | 87,906.00 | 100,373.00 | 112,840.00 |
| 66,120.00 | 115,360.00 | 49,240.00 | 36,740.00 | 89,642.00 | 102,501.00 | 115,360.00 |
| 67,520.00 | 117,880.00 | 50,360.00 | 37,860.00 | 91,378.00 | 104,629.00 | 117,880.00 |
| 68,920.00 | 120,400.00 | 51,480.00 | 38,980.00 | 93,114.00 | 106,757.00 | 120,400.00 |
| 70,320.00 | 122,920.00 | 52,600.00 | 40,100.00 | 94,850.00 | 108,885.00 | 122,920.00 |
| 71,720.00 | 125,440.00 | 53,720.00 | 41,220.00 | 96,586.00 | 111,013.00 | 125,440.00 |
| 73,120.00 | 127,960.00 | 54,840.00 | 42,340.00 | 98,322.00 | 113,141.00 | 127,960.00 |
| 74,520.00 | 130,480.00 | 55,960.00 | 43,460.00 | 100,058.00 | 115,269.00 | 130,480.00 |
| 75,920.00 | 133,000.00 | 57,080.00 | 44,580.00 | 101,794.00 | 117,397.00 | 133,000.00 |
| 77,320.00 | 135,520.00 | 58,200.00 | 45,700.00 | 103,530.00 | 119,525.00 | 135,520.00 |
| 78,720.00 | 138,040.00 | 59,320.00 | 46,820.00 | 105,266.00 | 121,653.00 | 138,040.00 |

## இன்று ஒரு தகவல் 336



தென்கச்சி கோ.சுவாமிநாதன்

# தீயோர்!

துஷ்டரைக் கண்டால் தூர விலகு! இப்படி ஒரு பழமொழி உண்டு. எதுக்காக இப்படிச் சொல்கிறார்கள். துஷ்டன் ஏதாவது தொந்தரவு கொடுப்பான். அவனைக் கண்டால் பயந்து ஓடி ஒழிந்துகொள்! அப்படி என்றா அர்த்தம்?

அப்படி இல்லை. ஒரு துஷ்டனிடம் நெருங்கிப் போனால் அவன் நமக்கு கெடுதலான ஆலோசனைகளைச் சொல்லலாம்! அல்லது தீய செயல்கள் செய்யக்கூடியவனாக இருக்கலாம். அல்லது தீய நட்பினாலே அவன் ஏற்கனவே கெட்டுப் போனவனாகக்கூட இருக்கலாம்.

இப்படிப்பட்டவனை நெருங்கிப் போனால் அவனுடைய பாதிப்பு நமக்கும் வந்துவிடும். அதனாலே விலகிப் போகச்சொல்கிறார்கள்.

இதையே கொஞ்சம் விபரமாகப் பார்ப்போம்.

துஷ்டர்களை நாலு வகையாக பிரிக்கிறார்கள். இந்த நாலு வகைக்கும் உதாரணம் வேண்டும் என்றால் வேறு எங்கேயும் போக வேண்டாம்!

மகாபாரதத்தைப் பார்த்தால் போதும். அதிலே இந்த நாலு வகையான தீயோரும் வருகிறார்கள்.

முதல்வகைக்கு உதாரணம் சகுனி! இவன் மனதிலே எப்பவும் தீய எண்ணாங்களே நிறைந்திருக்கும்.

கனவிலே கூட தீய ஆலோசனைகள்! யாராவது ஒருவர் நல்லபடியாக வாழ்தால் அதை இவனாலே சகித்துக்கொள்ள முடியாது! இப்படிப்பட்டவனுடைய நெருங்கிய தொடர்பு துரியோதனனுக்குக் கிடைத்தது.

துரியோதனன் எப்படி என்றால் அவன் ஏற்கனவே தீயகாரி யங்கள் செய்வதற்குத் தயங்காதவன். அப்படிப்பட்டவனுக்குத் தீய போதனைகள் செய்வதற்கு சகுனி உதவினான்.

இந்த இரண்டு பேருடைய சகவாசம் இன்னொருத்தருக்கு கிடைத்தது. அவன் யார் என்றால் துச்சாதனன்! அவன் தீய நடத்தையுள்ளவன்.

இந்த மூன்று துஷ்டர்களுடன் நல்லவன் ஒருத்தன் வந்து சேர்ந்தான். அவன்தான் கர்ணன்.

கர்ணன் இயல்பாகவே உத்தமகுணம் உள்ளவன். அவன் நல்லவர்களோடு சேராமல் இப்படிப்பட்ட கெட்டவர்களிடம் நட்பு வைத்துக் கொண்டான். அதனாலே அவனும் தீய செயல்களிலே ஈடுபடுவது போல ஆகிவிட்டது.

துரியோதனனுடைய நண்பனாக அவனுடைய ஆதரவிலே வளர்ந்ததாலே அவனுக்குத் துணையாக இருந்தான். நட்புரிமையினாலே உதவி புரிய வேண்டியது சரிதான். அது தப்பு என்று சொல்ல முடியாது. இருந்தாலும் தீய செயல்களுக்கு உதவி செய்வது சரியில்லை.

புத்திபலம், புஜபலம் எல்லாம் இருந்தால்கூட தெய்வபலம் இல்லையென்றால் ஜெயிக்க முடியாது என்பது பெரியவர்கள் கருத்து!

கர்ணன் மகாவீரன்! இருந்தாலும் கடைசியிலே அவன் கதி என்ன ஆகியது? அவனிடம் எல்லா நல்ல குணங்களும் இருந்தது! இருந்தாலும் ஏன் இப்படி ஆகியது? தீயவர்களின் சேர்க்கைதான் காரணம்!

அவர்களுடன் சேர்ந்ததினாலே இவனையும் அப்படியே நினைக்க ஆரம்பித்து விட்டார்கள். நாலு வகை துஷ்டர்களுள் இவன் ஒருவகை என்று சொல்ல ஆரம்பித்துவிட்டார்கள்.

அதாவது தீய ஆலோசனைக்கு சகுனி, தீய உணர்வுகளுக்கு துரியோதனன், தீய செய்கைக்கு துச்சாதனன், தீய நட்புக்கு கர்ணன் இப்படி உதாரணமாகிவிட்டார்கள்.

அதனாலேதான் துஷ்டரைக் கண்டால் தூர விலகு என்று சொன்னார்கள். அது புராண காலம்! இப்போது நிலைமை வேறு விதமாக இருக்கிறது. அன்று ஒருநாள் யாரோ ஒருவர் அப்படித்தான் ஒரு காட்டுப் பாதையிலே அடிபட்டுக்கிடந்தார்.

யாரோ ஒரு துஷ்டன் அவரை அடித்துப் போட்டு போய்விட்டான் போல இருக்கிறது. அந்த வழியாக போன ஒருவர் பரிதாபப்பட்டு அவனைப் போய் தூக்கினார். ஆறுதல் சொன்னார்.

இதோ பாருங்கள் இந்த வழியாக எப்பவும் தனியாக வரக்கூடாது. ஏனென்றால் இங்கே ரவுடி ஒருவன் வருவானாம். இந்த வழியால் போறவர்களிடம் எல்லாம் வழிப்பறி செய்வதாகக் கேள்விப்பட்டிருக்கிறேன்.

இனிமேல் அப்படிக் கேள்விப்படமாட்டீர்கள்.

அதற்கு அடிபட்ட ஆள் ஏன் என்று கேட்டார். நான்தான் சார் அந்த ரவுடி இந்த வழியாக போனவர்களிடம் தகராறு செய்தேன்.

அவர்கள் தான் என்னை இப்படி அடித்துப்போட்டுவிட்டு என்னிடம் இருந்த பணத்தையெல்லாம் பறித்துக்கொண்டு போய்விட்டார்கள். காலம் மிகவும் கெட்டுபோய்விட்டது! என்று பரிதாபமாக கூறினார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கல்கியின் பாகம் - 3

# பொன்னியின் செல்வன்

காவியத் தொடர் 720





வட நாட்டிலே சந்திரகுப்தர் என்ன, அசோகர் என்ன, சமுத்திர குப்தர் என்ன, விக்கிரமாதித்தியர் என்ன, ஹர்ஷவர்த்தனர் என்ன! இப்படி மகா சக்கரவர்த்திகள் தோன்றி மகா சாம்ராஜ்யங்களை ஆண்டிருக்கிறார்கள். தமிழ்நாட்டில் அவ்விதம் யாரேனும் பெரிய சாம்ராஜ்யத்தை ஸ்தாபித்து ஆண்டது உண்டா? காஞ்சி பல்லவர் குலத்தில் மகேந்திர சக்கரவர்த்தியும் மாமல்லரும் இருந்தார்கள். பிறகு அந்தக் குலமும் க்ஷீணித்துவிட்டது. அக்கா, நான் இராஜ்யம் ஆளுவதாயிருந்தால் இந்த மாதிரி சின்னஞ் சிறு இராஜ்யத்தை ஆளமாட்டேன்.

இலங்கை முதல் கங்கை வரையில் பரவி நிலைபெற்ற இராஜ்யத்தை ஆளுவேன். மாலத்தீவிலிருந்து சாவகத் தீவு வரையில் தூர தூர தேசங்களில் புலிக்கொடி பறக்கும் மகா சோழ சாம்ராஜ்யத்தின் சிம்மாசனத்தில் வீற்றிருப்பேன்! என்னைப் பைத்தியக்காரன் என்றுதானே எண்ணுகிறாய்!"

"இல்லை, அருள்வர்மா! என்னைப்போல் ஆகாசக் கோட்டைகள் கட்டுவதற்கும் கற்பனைக் கனவுகள் காண்பதற்கும் நீயும் ஒருவன் இருக்கிறாயே என்று எண்ணி மகிழ்கிறேன். நீ பைத்தியக்காரனாயிருந்தால் நான் உன்னைவிடப் பெரிய பைத்தியக்காரி. நம்முடைய தந்தையின் பாட்டனார் பராந்தக சக்கரவர்த்தி அப்படியெல்லாம் மனோராஜ்யம் செய்திருந்தார் என்பதை நான் அறிவேன். அவர் காலத்தில் அது பூரணமாய் நிறைவேறவில்லை. ஆனால் என்னுடைய ஆயுட்காலத்தில் நான் அதைப் பார்க்கப் போகிறேன். சோழ சாம்ராஜ்யம் இலங்கை முதல் கங்கை வரையிலும் மாலத்தீவு முதல் சாவகம் வரையிலும் பரந்து விஸ்தரிப்பதைப் பார்த்து விட்டுத்தான் நான் சாகப் போகிறேன். இந்த என் எண்ணம் நம் தமையன் ஆதித்த கரிகாலனால் நிறைவேறும் என்று ஒரு காலத்தில் நம்பினேன்.

அந்த நம்பிக்கை எனக்கு இப்போது போய்விட்டது. ஆதித்த கரிகாலன் மகாவீரன் ஆனால் மனத்தைக் கட்டுபடுத்தும் ஆற்றல் அவனிடம் இல்லை. அதனால் அவன் பெரிய காரியங்களைச் சாதிக்க முடியாது. என் மனோரதம் உன்னால் நிறைவேறும் என்ற ஆசை எனக்கு இன்னும் இருக்கிறது. ஒரு வேளை அதுவும் கைகூடாமல் போகலாம். அதனாலும் நான் நிராசை அடைய மாட்டேன்.

உன்னால் கை கூடாவிட்டால் உனக்குப் பிறக்கும் பிள்ளையினால் கைகூடும் என்று உறுதி கொண்டிருக்கிறேன். உனக்குப் பிறக்கும் புதல்வனை, பிறந்த நாளிலிருந்து நானே எடுத்து வளர்ப்பேன். அவனை இந்த உலகம் கண்டறியாத மகாவீரன் ஆக்குவேன். அற்ப ஆசைகளில் அவன் மனத்தைச் செலுத்தவிடாமல் அற்புதங்களைச் சாதிக்கக்கூடிய புருஷ சிங்கமாக்குவேன்."


"அக்கா! நீ என்னைவிடப் பெரிய பைத்தியம் என்பது நிச்சயம். எனக்குத் திருமணம் செய்து கொள்ளும் எண்ணமே இல்லை. எனக்குப் பிறக்கப் போகும் புதல்வனைப் பற்றி நீ பேச ஆரம்பித்து விட்டாய். நீ செல்லம் கொடுத்து வளர்க்கும் தோழிகளில் யாருக்காவது அத்தகைய எண்ணமிருந்தால், என்னை மணந்து கொண்டு மணிமகுடம் சூடிச் சிம்மாசனத்தில் வீற்றிருக்கலாம் என்ற ஆசை இருந்தால், அது ஒருநாளும் நிறைவேறப் போவதில்லை.

(தொடரும்...)



# சிறுவர் அரங்கம்

## கதவும் ஆணியும்



ஒரு ஊரில் ஒரு அப்பாவும் பிள்ளையும் இருந்தார்கள். அப்பா பெயர் பத்ரகிரி. மிகவும் நல்லவர். மகன் பெயர் ராஜன். அவன் ஊரில் உள்ள யாவரையும் ஏமாற்றி வாழ்ந்து கொண்டு வந்தான். அப்பா மகனை திருத்துவதற்காக எவ்வளவோ வழிமுறைகள் மேற்கொண்டார். மகன் திருந்தவேயில்லை. முடிவாக ஒரு நாள் அவர் தன் மகனிடம் 'நீ ஒவ்வொரு ஆளை ஏமாற்றும் போது நம் வீட்டுக் கதவில் ஒரு ஆணி அடிக்கப் போகிறேன் அதை பார்த்தாவது நீ திருந்த வேண்டும் என்றார்.

அதை ராஜன் கண்டு கொள்ளவேயில்லை. ஆனால் ராஜன் செய்யும் ஒவ்வொரு தவறிற்கும் அவனது அப்பா அவர்கள் வீட்டுக்கதவில் ஒரு ஆணி அடிக்கத் தொடங்கினார். மகன் எதைப் பற்றியும் கவலைப் படாமல் பலநாட்களாக ஊரை ஏமாற்றிவந்தான். வருடங்கள் கடந்தது.

ஒரு நாள் இரவு ராஜன் வீடு திரும்பி வந்த போது தன் வீட்டுக் கதவில் ஆயிரக்கணக்கில் ஆணிகள் அடிக்கப்பட்டிருப்பதைக் கண்டான். அந்தக் காட்சி அவன் மனதை உறுத்தத் தொடங்கியது. ஆணிகளைத் தன் விரலால் தொட்டுப் பார்த்தான் இடைவெளியின்றி ஆணிகள் அடிக்கப்பட்டிருந்தன.

சே நான் எவ்வளவு தவறுகள் செய்திருக்கிறேன். நான் மிக மோசமான மனிதன். தன்னை மன்னிக்கும்படியாக அப்பாவிடம் கேட்கப் போகிறேன் என்று மனம் வருந்தினான். மறுநாள் அப்பாவிடம் நான் திருந்தி [illegible] போகிறேன் இனி நான் எவரையும் ஏமாற்ற மாட்டேன் 'என்று மன்னிப்புக் கேட்டான்'.

அப்பா, ராஜன் நீ ஏமாற்றாமல் இருந்தால் மட்டும் போதாது. மற்றவர்களுக்கு நல்லது செய்ய வேண்டும். அப்படி நீ செய்யும் ஒவ்வொரு நல்லதிற்கும் கதவிலிருந்து ஒரு ஆணியைப் பிடுங்கி எடுத்து விடுகிறேன் ' என்று சொன்னார். மறுநாளில் இருந்து ராஜன் தன்னால் முடிந்த அளவு உதவிகள் செய்யத் தொடங்கினான். அப்பாவும் அவன் செய்யும் நல்ல காரியத்திற்கு ஏற்ப கதவில் இருந்த ஆணிகளைப் பிடுங்கிக் கொண்டேயிருந்தார். ஆனால் ஏமாற்றுவதைப் போல உதவி செய்வதை மிக வேகமாக செய்யமுடியவில்லை.

ஆகவே அவன் ஒவ்வொரு நாளும் வீடு திரும்பும் போதும் கதவில் இருந்த ஆணிகளை உற்றுக் கவனிப்பான். இன்னும் இவ்வளவு ஆணிகள் இருக்கிறதே என்று வேதனைப்படுவான். எப்படியாவது அந்த ஆணிகள் ஒன்று கூட இல்லாமல் செய்ய வேண்டும் என்று மனதிற்குள் உறுதி எடுத்துக் கொள்வான். பல வருடங்கள் கடந்து போனது. அப்பாவும் வயோதிபம் அடைந்து படுக்கையில் வீழ்ந்தார்.

முடிவாக ஒரு நாள் மகன் ஆற்றில் வெள்ளத்தில் அடித்துப்போக இருந்த ஒரு குடும்பத்தை தன் உயிரைப் பற்றி கவலைப் படாமல் குதித்து காப்பாற்றினான் என்று கேள்விப்பட்டு கதவில் அடிக்கப்பட்டிருந்த கடைசி ஆணியையும் அப்பா பிடுங்கி எறிந்தார். மகன் ஆணிகள் இல்லாத கதவைப் பார்த்து பெருமூச்சிட்டபடியே அப்பா இனி நான் நல்லவன் தான் இல்லையா என்று கேட்டான் அப்பா 'ராஜன் நீ இந்தக் கதவை தொட்டுப் பார்த்து வா ' என்று சொன்னார்.

ஒரு முறை நன்றாக மகன் கதவை நெருங்கிச் சென்று பார்த்தான். கதவு முழுவதும் ஆணி அடிக்கப்பட்ட துளைகள் அப்படியே இருந்தன. அதைக் கண்டு அப்பா சொன்னார். 'பார்த்தாயா கதவு முன்பு நன்றாக இருந்தது. நீ செய்த தவறின் காரணமாகத் தான் ஆணி அடிக்கப்பட்டது. நீ திருந்தியபிறகு ஆணியைப் பிடுங்கியாகி விட்டது. ஆனால் தழும்புகள் அப்படியே தானிருக்கின்றன.

இப்படித் தான் நீ செய்த தவறுகள் மன்னிக்கப்படலாம். ஆனால் அதனால் ஏற்பட்ட விளைவுகள் ஒருபோதும் அழிவதேயில்லை. அதனால் தவறு செய்யாமல் இருக்க வேண்டும் என்பதே முக்கியமானது என்றார்.

அந்தக் கதவு தன் மனசாட்சியின் வடிவம் போலிருப்பதை அன்று தான் மகன் உணர்ந்தான். அதன் பிறகு அவன் நல்லவனாக தன் வாழ்நாளின் இறுதிவரை வாழ்ந்தான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

> ஒவ்வொரு காரியத்தையும் உள்ளன்போடு செய்யுங்கள்; பின் வேறுவிதமாக செய்ய ஒருபோதும் மனம் விரும்பாது. – யாரோ

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk

## புலம்பெயர் உறவுகளுக்கு ஓர் அவசர மடல்

புலம்பெயர் தமிழ் உறவுகளுக்கு அன்பு வணக்கம். தாயகத்தின் மீது நீங்கள் கொண்ட பற்றுக்கும் பாசத்துக்கும் தலைவணங்குகின்றோம்.

பொதுவில் உங்களை புலம்பெயர் உறவுகள் என்று வகைமைப்படுத்துவதில் எமக்கு உடன்பாடில்லை.

பெற்ற தாயாக, தந்தையாக, பிள்ளையாக, சகோதரமாக இருக்கக்கூடிய இரத்த உறவை புலம்பெயர் உறவு எனக் கூறுவது எந்தவகையில் பொருத்தம் என்ற எழுவினா எம்முள் தொடர்ந்தும் இருக்கவே செய்கிறது.

ஆயினும் அதுவே இப்போதைய உச்சரிப்பாக இருப்பதன் காரணமாக பொருள் விளக்கம் கருதி, புலம்பெயர் உறவுகள் என்ற சொற்பதத்தை நாமும் இவ்விடத்தில் பிரஸ்தாபிக்கின்றோம்.

உண்மையில் எங்கள் தாயகத்தில் நடந்த யுத்தம், அதனூடு கூடிய பொருளாதாரத் தடை, தொழில் இழப்பு என சொல்லொணாத் துன்ப துயரங்களைத் தாயக உறவுகள் அனுபவித்த போதெல்லாம் உங்களின் அரவணைப்பும் நிதி உதவியும் தமிழ் இனத்தைத் தாங்கிற்று.

தவிர, புலம்பெயர் உறவுகளாகிய நீங்கள் இமைப்பொழுதும் தாயகத்தை நீங்காது நினைக்கின்றீர்கள் எனும்போது, உங்களிடம் இருக்கக்கூடிய அந்த ஒப்பற்ற அன்பே நீங்கள் ஆற்றும் உதவிகளுக்குக் காரணமாகும்.

எனினும் உங்களின் அன்பின் மிகுதியை, இரக்கத்தை, பாசப் பிணைப்பை, உதவி செய்யும் உங்களின் உயர்ந்த உள்ளத்தை பயன்படுத்தி, தங்கள் சுயநலனைக் கவனிக்கின்றவர்களும் உள்ளனர் என்ற உண்மையை நீங்கள் புரிந்து கொள்ள வேண்டும்.

தவிர, உங்களின் உதவி யாரை நோக்கி அமைந்ததோ அந்த உதவி அவர்களுக்குச் சென்று சேராத துர்ப்பாக்கியங்களும் உண்டு.

இதற்கும் மேலாக, உங்களில் சிலர் உதவி என்ற பேரால் உபத்திரவங்களையும் ஏற்படுத்திவிடுகின்றனர்.

அதிலும் குறிப்பாக சில அமைப்புகளுக்கு உதவிகளை வழங்கிவிட்டு அதற்கு நிபந்தனைகள் விதித்து இங்குள்ள சுமுகமான இயங்கு நிலையைக் குழப்புவதும் நடந்தாகிறது.

தவிர, அரசியல் விடயங்களிலும் புலம்பெயர் அமைப்புகளில் இருக்கக்கூடிய சிலர் மோசமாக நடந்து கொள்கின்றனர்.

ஏன்? எதற்கு? என்ற கேள்வி நியாயம் இல்லாமல் அவர்கள் அரசியல் தரப்புகளுக்கு வழங்குகின்ற உதவிகள் தமிழர்களின் அரசியலை எங்கே கொண்டு போய் நிறுத்தியுள்ளதென்பதை நிச்சயம் நீங்கள் அறிவீர்கள்.

இப்போதுகூட யூரியூப் சனல் மூலம் தாயகத்து உறவுகளின் ஏழ்மையைப் பகிரங்கப்படுத்துகின்ற நாசகாரம் நடந்தாகிறது.

அந்தோ கொடுமை! வறுமைப்பட்ட மக்களை வைத்து எப்படியெல்லாம் நம்மவர்கள் வியாபாரம் செய்கின்றனர் என்பதை நினைக்கும்போது, இந்த உலகத்திலேயே இதுபோன்ற கீழ்மைத்தனம் நம் தமிழினத்தில் மட்டுமே இருக்க முடியும் என்று எண்ணுமளவுக்கு அநாகரிகர்கள் எழுந்து ஆடுகின்றனர்.

இத்தகையவர்களுக்கான முதலீடுகளைப் புலம்பெயர் உறவுகளில் ஒரு தரப்பு செய்கிறது எனும்போது வேதனை தாங்க முடியவில்லை.

ஆக, உங்கள் உதவி எப்போதும் தேவை. ஆனால் அது உரியவர்களுக்கு உரியவாறு கௌரவமாகக் கிடைப்பதை உறுதி செய்யுங்கள். இதுவே உங்களிடம் நாம் வினயமாக வேண்டுவது.

# புதுக்கடை நீதிமன்றில் நடந்த கொலை சந்தேகநபர் கடல் வழியாக தப்பினாரா?

## செவ்வந்தி தொடர்பில் கொழும்பு ஊடகம் தகவல்

(கொழும்பு)— புதுக்கடை நீதிமன்றத்தில் பாதாள உலகக்கும்பல் தலைவர் கணேமுல்லே சஞ்சீவ சுட்டுக் கொல்லப்பட்டதற்கு மூளையாக செயற்பட்டதாகக் கருதப்படும் இளம்பெண் இஷாரா செவ்வந்தி கடல் வழியாகப் படகு மூலம் இந்தியாவுக்குத் தப்பிச் சென்றிருக்கலாம் என்று விசாரணை அதிகாரிகள் சந்தேகிப்பதாகக் கொழும்பு ஊடகமொன்று செய்தி வெளியிட்டுள்ளது.

குறித்த செய்தியில், சந்தேக நபர் மறைந்திருப்பதாக நம்பப்படும் 200 இடங்களில் இதுவரை சோதனை நடத்தியதாகவும் ஆனால் அவரைப் பற்றிய எந்தத் தகவலும் கிடைக்கவில்லை என்றும் விசாரணை அதிகாரிகள் தெரிவித்தனர்.

சந்தேக நபரான இஷாரா செவ்வந்தி தனது கையடக்கத் தொலைபேசியை பயன்படுத்துவதை நிறுத்திவிட்டதால் அவரைப் பற்றிய எந்தத் தடயமும் கிடைக்கவில்லை.

கணேமுல்ல சஞ்சீவ கொலை செய்யப்பட்ட இரண்டு நாட்களுக்குப் பின்னர் இஷாரா செவ்வந்தி களுத்துறைப் பகுதிக்குச் சென்று ஒரு தங்க நகைக் கடையிலிருந்து சுமார் 5 இலட்சம் ரூபாய் மதிப்புள்ள நகைகளை வாங்கியுள்ளார்.

எனினும் அதன் பின்னர் சந்தேகநபர் பற்றிக் குறிப்பிடத்தக்க தகவல்கள் எதுவும் கிடைக்கவில்லை.

சந்தேக நபர் தென் மாகாண கடற்கரை வழியாகப் படகு மூலம் நாட்டை விட்டுத் தப்பிச் சென்றிருக்கலாம் என்ற பலத்த சந்தேகம் தற்போது எழுந்துள்ளதாகவும் பொலிஸார் தெரிவித்தனர் என அச்செய்தி ஊடகம் தெரிவித்துள்ளது. (ந-7)

# உயிர்த்த ஞாயிறு தாக்குதல் வழக்கை விசாரிக்க புதிய நீதிபதிகள் குழாம்

## கோரியது சட்டமா அதிபர் திணைக்களம்

உயிர்த்த ஞாயிறு தாக்குதல் தொடர்பான வழக்கு விசாரணைக்காக புதிய நீதிபதிகள் குழாத்தை நியமிக்குமாறு சட்டமா அதிபர் திணைக்களம் வேண்டுகோள் விடுத்துள்ளது.

பிரதிவாதிகளிடம் விளக்கங்களைக் கோராமல் பிரதிவாதிகள் விடுவிக்கப்பட்டதை அடிப்படையாகக் கொண்டே புதிய நீதிபதிகள் குழாத்தை நியமிக்குமாறு சட்டமா அதிபர் திணைக்களம் வேண்டுகோள் விடுத்துள்ளது.

குறித்த வழக்கு உயிர்த்த ஞாயிறு தினத்தன்று தாக்குதல் நடத்தப்படவுள்ளதாகப் புலனாய்வுத் தகவல்கள் கிடைத்திருந்தும் அதனைத் தடுப்பதற்கான நடவடிக்கை எடுக்காமல் கடமைகளைத் தவறவிட்டதன் ஊடாக குற்றவியல் குற்றச்சாட்டுகளின் கீழான குற்றங்களை இழைத்துள்ளமை உள்ளிட்ட குற்றச்சாட்டுகளின் கீழ் முன்னாள் பாதுகாப்பு செயலாளர் ஹேமசிறி பெர்னாண்டோ, முன்னாள் பொலிஸ் மாஅதிபர் பூஜித ஜயசுந்தர ஆகியோருக்கு எதிராக சட்ட மாஅதிபரால் கொழும்பு விசேட மூவரடங்கிய மேல் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டதாகும்.

இந்த வழக்கை விசாரணை செய்த கொழும்பு விசேட மூவரடங்கிய நீதிபதிகள் குழாம் வழக்கின் பிரதிவாதிகளை விசாரணைகளுக்கு அழைக்காது 2022 பெப்ரவரி 18ஆம் திகதி பிரதிவாதிகளை விடுவித்து தீர்ப்பளித்தது.

மூவரடங்கிய மேல் நீதிமன்ற நீதிபதிகள் குழாத்தின் இந்தத் தீர்ப்பு சட்டத்திற்கு முரணானது எனவும் அதனை வலுவிழக்கச் செய்யுமாறும் கோரி சட்ட மாஅதிபரால் பின்னர் உயர் நீதிமன்றத்தில் மேன்முறையீட்டு மனு தாக்கல் செய்யப்பட்டது.

குறித்த மேன்முறையீட்டை பரிசீலித்த உயர் நீதிமன்றம் பிரதிவாதிகளை அழைக்காமல் அவர்களை விடுவித்தமையானது சட்டத்திற்கு முரணான விடயம் என உத்தரவிட்டது. (ந-7)

# நவீனமயப்படுத்தப்பட்ட ஆனையிறவு உப்பளம்

## இம்மாதம் 26ம் திகதி ஆரம்பம்

(ஆனையிறவு)— நவீன உபகரணங்கள் மற்றும் வசதிகளுடன் மீளமைக்கப்பட்ட ஆனையிறவு உப்பளம் இம்மாதம் 26ஆம் திகதி முதல் தனது சேவையை வழங்கவுள்ளது.

உப்பு உற்பத்தியின் போது அயடின் சேர்க்கும் தொழில்நுட்பம் மற்றும் வசதிகளுடனான நவீன மயப்படுத்தப்பட்ட ஆனையிறவு தொழிற்சாலை ஊடாக 26ஆம் திகதியில் இருந்து நுகர்விற்காக உப்பு சந்தைக்கு அனுப்பப்படும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ந-7)

# புனர்வாழ்வு பெறும் மகனுக்கு ஹெரோயின் கொடுத்த தந்தை

(வவுனியா)— வவுனியா, பூந்தோட்டம் போதைப் பொருள் புனர்வாழ்வு நிலையத்தில் புனர்வாழ்வு பெற்று வரும் தனது மகனுக்கு ஹெரோயின் போதைப் பொருள் வழங்க முற்பட்டதாக உப பொலிஸ் பரிசோதகர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

நேற்று இடம்பெற்ற இச் சம்பவம் தொடர்பில் மேலும் தெரியவருவதாவது, போதைப்பொருள் பாவனை தொடர்பில் கைது செய்யப்பட்டு நீதிமன்ற உத்தரவுக்கமைய இளைஞர் ஒருவர் வவுனியா, பூந்தோட்டம் புனர்வாழ்வு நிலையத்திற்கு 6 மாத புனர்வாழ்வுக்காக அனுமதிக்கப்பட்டிருந்தார்.

தற்போது 4 மாதங்கள் நிறைவடைந்த நிலையில், குறித்த இளைஞரை பார்வையிடுவதற்காக குருநாகல் பகுதியில்உள்ள பொலிஸ் நிலையம் ஒன்றில் குற்றத்தடுப்புப் பிரிவில் உப பொலிஸ் பரிசோதகராகக் கடமையாற்றும் தந்தையும், பொலிஸாராக கடமையாற்றும்தாயும் வருகை தந்துள்ளனர்.

புனர்வாழ்வு நிலையத்திற்குள் சென்று தமது மகனைப் பார்வையிட்ட போது அவர்கள் இருந்த இடத்தை நோக்கி பொலிஸ் மோப்ப நாய் வந்ததை அவதானித்த அவர்கள் தமது பையில் இருந்த பொதி ஒன்றை எடுத்து வெளியே வீசியுள்ளனர்.

இதனைக் காவல் கடமையில் இருந்த பாதுகாப்புத் தரப்பினர் அவதானித்துள்ளனர்.

உடனடியாக மோப்ப நாயின் உதவியுடன் அதனை சோதனையிட்ட போது அதில் 240 மில்லி கிராம் ஹெரோயின் போதைப் பொருள் இருந்தமை கண்டுபிடிக்கப்பட்டது.

இதனையடுத்து குறித்த மோப்ப நாய் அதனை வீசிய இளைஞரின் தந்தையான உப பொலிஸ் பரிசோதகரையும் அடையாளம் காட்டிய நிலையில், அவர் கைது செய்யப்பட்டு வவுனியா பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டார்.

மேலதிக விசாரணைகளின் பின் குறித்த உப பொலிஸ் பரிசோதகரை நீதிமன்றில் முற்படுத்த பொலிஸார் நடவடிக்கை எடுத்துள்ளனர். (ந-7)

# சட்டவிரோத சிகரெட்டுக்களுடன் ஒருவர் கைது....

(கொழும்பு)— சட்டவிரோதமாக நாட்டிற்குக் கொண்டு வரப்பட்ட 13 ஆயிரம் சிகரெட்டுக்களுடன் கட்டுநாயக்க சர்வதேச விமானநிலையத்தில் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளதாக விமான நிலைய பொலிஸ் போதைப் பொருள் ஒழிப்புப் பணியகம் தெரிவித்துள்ளது.

கண்டிப் பகுதியைச் சேர்ந்த 50 வயதுடைய நபரே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளதுடன், இது தொடர்பான மேலதிக விசாரணைகளை பொலிஸ் போதைப் பொருள் ஒழிப்புப் பணியகம் முன்னெடுத்து வருகிறது. (ந-7)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# போதனா வைத்தியசாலையில்

# நோயாளர் நட்புறவாளர் சேவை

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையை நாடும் நோயாளிகளின் அடிப்படைத் தேவைகளை இலகுபடுத்தி நோயாளரின் சுகாதார நலன் பெறுதலை வினைத்திறனாக்கும் வகையில் யாழ்.போதனா நோயாளர் நட்புறவாளர் சேவை ஆரம்பிக்கப்படவுள்ளது.

மருத்துவம், உளவள ஆலோசனை சார்ந்த துறையில் கற்கையை (NVQ3 Level) பூர்த்தி செய்தவர்கள் அல்லது அதேதுறையில் குறைந்தது மூன்று வருட அனுபவத்துடன் சமூக சேவைப் பின்னணி உள்ளவர்கள் குறித்த திட்டத்துக்கு விண்ணப்பிக்கமுடியும்.

தேர்வு செய்யப்பட்ட விண்ணப்பதாரர்கள் நேர்முகத் தேர்வு மூலம் தேர்ந்தெடுக்கப்படுவார்கள்.

விண்ணப்பிக்க விரும்புபவர்கள் சுயவிபரக் கோவையை இல 69. புங்கன்குளம் வீதி, அரியாலை, யாழ்ப்பாணம் எனும் முகவரிக்கு எதிர்வரும் 15 ஆம் திகதிக்கு முன்னர் அனுப்பிவைக்குமாறும்,

மேலதிக விபரங்களுக்கு 077 002 4334 எனும் தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொள்ளுமாறும் யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையின் பணிப்பாளர் வைத்திய கலாநிதி த.சத்தியமூர்த்தி தெரிவித்துள்ளார். (6-8)

# வாரம் ஒரு யாழ்ப்பாணத்து மூலிகை

## பார்லி



டாக்டர் (திருமதி) விவியன் சத்தியசீலன்
M.D(Siddha)India
சிரேஷ்ட விரிவுரையாளர்
சித்தமருத்துவத்துறை
யாழ்.பல்கலைக்கழகம்

**Botanical name- Hordeum vulgare**
**Family- Poaceae**
**Engl-Barly**

உணவு வகையைச் சேர்ந்தது. இதில் பார்லி, சீமை பார்லி என்ற இரு வகை உண்டு. சாதாரண பார்லி இந்தியாவில் பயிரிடப்படகிறது. சீமை பார்லி வெளிநாடுகளில் பயிரிட்டு அரிசியாக்கி இறக்குமதி செய்யப்படுகிறது. இவ் அரிசி முட்டை வடிவமாக இருக்கும். வெண்மை நிறமாகவும் காணப்படும்.

வெளிநாடுகள் பலவற்றில் சீமைப்



பார்லியானது Liquor தயாரிப்பில் பயன்படுத்தப்படுகிறது. அரிசி, கோதுமை, சோளம் இதற்கு அடுத்த படியாக நாலாவதாக பார்லி தானியமாக கொள்ளப்படுகிறது. இதற்கு வாற் கோதுமை என்னும் பெயர் உண்டு.

சத்தான உணவுவகைகளில் ஒன்று பார்லி. உடல் எடையை குறைக்க நினைப்பவர்களும் இதனைப் பயன்படுத்தலாம். பார்லியைத் தண்ணீராக பயன்படுத்தும் போது உடல் எடை குறையும், பார்லி அரிசியில் கரையக் கூடிய நார்ச்சத்து அதிகமாகக் காணப்படும். பார்லியைத் தண்ணீராகக் குடிக்கும் போது பசி எடுக்கும் அளவும் குறையும். நிறைய சாப்பிட்டது போன்ற திருப்தியும் ஏற்படும். பார்லியிலுள்ள வளவளப்புத் தன்மையும் கெட்டித்தன்மையும், நார்ச்சத்தும் இதற்குக் காரணமாகும். குழந்தைகள், கர்ப்பிணிப் பெண்கள், நீரிழிவு நோயாளிகள் இருதய நோயாளிகள், வயதானவர்கள் யாவரும் பார்லி பயன்படுத்தலாம். ஒவ்வொரு நாளும் சாப்பிடக் கூடாது.

வாரத்தில் இரண்டு நாட்கள் பார்லித் தண்ணீராக பயன்படுத்தலாம். அதே போல் வாரத்தில் இரண்டு நாட்கள் பார்லிக் கஞ்சி அல்லது பார்லி சூப்பாகவும் பயன்படுத்தலாம்.

பார்லி அரிசியில் விற்றமின்கள், தாதுச் சத்துக்கள் நிறையக் காணப்படுகின்றன.

அதேபோல் பார்லிச் சாதத்தை சாப்பிடும் போது எமது கைக்குத்தரிசிச் சோறின் சுவையில் காணப்படும். இதற்கு இனிப்புச் சுவையும் தட்பமான வீரியமும், இனிப்பு விபாகமம் காணப்படும்.

எல்லாவிதமான காய்கறிகள், சலாட் வகைகளுடனும் பார்லி சேர்த்துப் பயன்படுத்தலாம், கடைகளில் பார்லியானது உமிநீக்கப்பட்டு அல்லது பதப்படுத்தப்பட்டுக் கிடைக்கிறது.

கடைகளில் பார்லி gr outs ஆகக்கிடைக்கும். இது மேற்புறம் நீக்கி கிடைக்கும் சமைக்கவும் சுலபமாக இருக்கும்.

அதே நேரம் சாப்பிடக் கூடியதாகவும் இருக்கும். மென்று சாப்பிடவும் சுவையாக நன்றாக இருக்கும்.

முக்கியமாக பித்தப்பையில் இருக்கும் பித்த நீர்க் கட்டி பட்டு கற்களாக உருவாகும் தன்மையை தடுக்கும் ஆற்றல் பார்லிக்கு உண்டு.

வேகமாக எடை குறைக்க நினைப்பவர்கள் கொழுப்பு உணவுகளை அதிகமாக எடுப்பதைச் சடுதியாக குறைக்கும் போது கொழுப்பு சமிபாட்டிற்கு உதவும் பித்த நீருக்கு வேலை குறைவாகும் போது பித்தநீர் கட்டிபட்டு பித்தக்கற்களாக உருவாகக் கூடிய தன்மை அதிகரிக்கும். எனவே எடையைக் குறைக்க முயற்சி செய்பவர்கள் நார்ச்சத்து, புரதச்சத்து இரண்டையும் கட்டாயமாக எடுத்துக் கொள்ள வேண்டும்.

எனவே எடைகுறைப்பு செய்யவிருப்புவர்கட்கு பார்லி வரப்பிரசாதமாக அமைந்துவிடுகிறது. பார்லியானது பல ஆராய்ச்சிகளில் பித்தப்பையில் கற்கள் உருவாகுவதைத் தடுப்ப தாக எடுத்து இயம்புகின்றது. இரத்தத்தில் சிவப்பு அணுக்கள் குறையும் போது இரத்தச் சோகை சோர்வு, அசதி போன்றன ஏற்படுகிறது. இதற்கு விற்றமின் B12, இரும்புச்சத்துள்ள உணவுகளை அதிகளவில் எடுத்துக் கொள்ள வேண்டும். பார்லியில் அதிகளவு விற்றமின் B 12, இரும்புச்சத்துக் காணப்படுகிறது.

செரிமானப் பிரச்சினைகள் உள்ளவர்களும் பார்லி அரிசியை எடுத்துக் கொள்ளலாம். பார்லி அரிசியிலுள்ள நார்ச்சத்தானது குடலில் நல்ல நுண்ணங்கிகளின் வளர்ச்சியைத் தூண்டுகிறது. இந்த நுண்ணுயிர்க் கிருமிகள் தான் உணவு செரிமானத்திற்குஅவசியம்.

சத்தான உணவுகள் அகத்துறிஞ்சப்படுவதற்கும், அதேநேரம் கழிவுகளை வெளியேற்றவும் உதவுகிறது.

எல்லாவிதமான புற்று நோயிற்கு எதிராக தொழிற்படக் கூடிய சத்துக்களும் பார்லியில் காணப்படுகிறது. Anti oxidant , சப்போனின், பைற்றிக்கமிலம், பினோலிக்கமிலம் போன்ற சத்துக்கள் புற்றுநோய்க் கலங்களின் வளர்ச்சியை தடுக்கக் கூடியதாக இருக்கும்.

பார்லியில் இருந்து தயாரிக்கும் பார்லித் தண்ணீர், பார்லிக்கஞ்சி, பார்லி சூப் எதுவாக பயன்படுத்தினாலும் எமது தோலிற்கு நன்மையை கொடுக்கிறது. தோல்களின் ஈரப்பதன் பாதுகாக்கப்படுகிறது. தோல்களில் சுருக்கம் ஏற்படுவதையும் தள்ளிப் போட உதவுகிறது.

பார்லி அரிசியை மாவாக்கி குளிர்ந்த நீரில் குழைத்து



Face Pack போல முகத்தில் பூசி 20 நிமிட நேரம் கழித்து முகத்தை கழுவிவர முகம் பொலிவாக வரக் கூடியதாகவும் இருக்கும். பார்லியை முறையாக, ஒழுங்காக எடுத்துக் கொள்ளும் போது இரத்தக் கொதிப்பின் அளவையும் குறைத்து, கெட்ட கொலஸ்ரோலின் அளவையும் குறைக்கிறது. இவ் இரண்டு செயல்களும் இருதயத்தின் ஆரோக்கியத்திற்கு உதவுகிறது. நீரிழிவு நோயாளிகளும் பயன்படுத்தலாம். இன்சுலின் ஹோமின் அதிகரிப்பதற்கு மக்னீசியம் எனும் தாதுப் பொருள் அவசியமாகிறது. எனவே இவ் மக்னீசியம் இருந்தால் இன்சுலினின் உற்பத்தி அதிகரிக்கும். மக்னீசியம் சத்துள்ள உணவுகளுள் பார்லியும் ஒன்றாகும்.

அத்துடன் இதிலிருக்கும் நார்ச்சத்து உணவினை விரைவாக சீரணமாக்கி குடலிற்குள் சென்று விடுவதால் இரத்தத்தில் விரைவாக சீனிச்சத்து அதிகரிப்பதையும் தடுக்கிறது. பார்லி, ஓட்ஸ் இரண்டிற்குமிடையே நடத்தப்பட்ட ஆய்வுகளின் முடிவின்படி Fasting Blood Suger இனை ஓட்ஸினை விட பார்லி அதிகமாகக் குறைப்பதாக ஆய்வுகள் எடுத்தியம்புகின்றன.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## அநுர - டிலான்...

கோனைக் கைதாவதைத் தடுத்துள்ளதாக முன்னாள் அமைச்சர் பாட்டலி சம்பிக்க ரணவக்க குற்றம் சாட்டியுள்ளார்.

ஹோமகமவில் நடந்த கூட்டத்தில் கருத்துரைத்த அவர்,

டிரான் அலஸ் என்ன மோசடி செய்தாலும் அல்லது கொலை செய்தாலும் அவருக்கு எதிராக எந்த நடவடிக்கையும் ஜனாதிபதி அநுரகுமார எடுக்க மாட்டார்.

அத்துடன் தேசபந்து கைது செய்யப்படாமைக்குப் பின்னால் டிரான் அலஸ் இருக்கிறார் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

அநுரவுக்கும் டிரான் அலஸூக்கும் இடையில் உள்ள ஒப்பந்தப்படி, அலஸ் மோசடி செய்தாலோ, ஈ விசா அல்லது ஈ-கடவுச் சீட்டு மோசடியில் ஈடுபட்டாலோ ஏன் அவர் கொலை செய்தாலும், அவருக்கு எதிராக அநுர குமார எந்த நடவடிக்கையும் எடுக்க மாட்டார் என்றும் சம்பிக்க ரணவக்க தெரிவித்துள்ளார். (ந-7)

## தேசபந்து...

ரீதியாக அவரது சொத்துக்களைப் பறிமுதல் செய்ய நடவடிக்கை எடுக்கப்படும் என்று பொதுமக்கள் பாதுகாப்புப் பிரதி அமைச்சர் சுனில் வட்டகல தெரிவித்துள்ளார்.

முகத்துவாரம் பகுதியில் நேற்று ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்ற நிகழ்வொன்றில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவிக்கும்போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

இதேவேளை முன்னாள் பொலிஸ் அதிபர் தேசபந்து தென்னகோன் வெளிநாடொன்றுக்குத் தப்பிச் சென்றுள்ளார் எனத் தகவல்கள் தெரிவிக்கின்றன. (ந-7)

## அநுர அரசின்...

யடைந்துள்ளனர்.

எனவே உள்ளூராட்சித் தேர்தலில் அரசாங்கத்துக்கு மக்கள் பாடம் புகட்டுவார்கள் என உதய கம்மன்பில தெரிவித்துள்ளார்.

சர்வஜன அதிகாரக் கட்சியின் காரியாலயத்தில் நேற்று ஞாயிற்றுக் கிழமை நடைபெற்ற வேட்புமனுத் தாக்கல் தொடர்பான நேர்காணலில் கலந்துகொண்டதன் பின்னர் ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவிக்கையில் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அங்கு அவர் மேலும் தெரிவித்ததாவது,

நடைபெறவுள்ள உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் சகல தேர்தல் மாவட்டங்களிலும் போட்டியிடுவோம். தேசிய மக்கள் சக்தி ஜனாதிபதித் தேர்தல் மற்றும் பொதுத்தேர்தலில் வழங்கிய வாக்குறுதிகள் அனைத்தும் பொய்யானது என்பதை மக்கள் தற்போது விளங்கிக் கொண்டுள்ளார்கள்.

அரசாங்கத்தின் மிதமிஞ்சிய பொய்யால் மக்கள் கடும் அதிருப்தியடைந்துள்ளார்கள். நடைபெறவுள்ள உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் அரசாங்கத்தின் பொய்களுக்கு மக்கள் தகுந்த பாடம் கற்பிப்பார்கள். ஜனாதிபதி அநுர குமார திஸாநாயக்கவுக்கு பொருளாதாரக் கொள்கை என்பது கிடையாது.

ஜனாதிபதித் தேர்தலில் முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் பொருளாதாரக் கொள்கையை ஜனாதிபதி அநுர குமார திஸாநாயக்க கடுமையாக விமர்சித்தார். ஆட்சிக்கு வந்தவுடன் சர்வதேச நாணய நிதியத்தில் இருந்து வெளியேறுவதாகக் குறிப்பிட்டார். ஆனால் தற்போது ரணில் விக்கிரமசிங்கவின் பொருளாதார கொள்கைகளை எவ்வித மாற்றமுமில்லாமல் அமுல்படுத்துகிறார். நாணய நிதியத்தை தஞ்சமடைந்து புகழ்பாடுகிறார்.

தேசிய மக்கள் சக்தியின் பொருளாதாரக் கொள்கை எவ்வாறானது என்பது கேள்விக்குள்ளாக்கப்பட்டுள்ளது. நாட்டை எவ்வாறு நிர்வகிப்பது என்பது தெரியாமல் அரசாங்கம் தற்போது தடுமாற்றமடைந்துள்ளது. உள்ளூராட்சி மன்றத் தேர்தல் ஊடாக எமது பலத்தை மீண்டும் உறுதிப்படுத்துவோம். அரசாங்கம் மக்களுக்குப் பொய்யான பல வாக்குறுதிகளை வழங்கியது. இதுவே எம்மை வெற்றி பெறச் செய்யும் என்றார். (ந-7)

## காணொளியில்...

வர்களுக்கு உதவி செய்வதாக புலம்பெயர் தமிழர்களிடம் நிதியினைப் பெற்று, அதன் ஊடாக உதவி செய்வது போன்ற காணொளிகளைத் தனது யூரியூப் தளத்தில் பதிவேற்றி வந்துள்ளார்.

இந்நிலையில், கடந்த சில தினங்களுக்கு முன்னர் தந்தையை இழந்து தாயின் அரவணைப்பில் வாழ்ந்துவரும் பாடசாலை மாணவியொருவரின் வீட்டுக்கு இரவு வேளை சென்ற குறித்த நபர், பாடசாலை மாணவியை காணொளி எடுக்க முற்பட்டுள்ளார். அதற்கு மாணவி மறுப்புத் தெரிவிக்கவே, காணொளியில் நாகரிகமற்ற வார்த்தைகளைப் பயன்படுத்தியுள்ளார்.

குறித்த காணொளி சமூக வலைத்தளங்களில் பரவியதை அடுத்து பல்வேறு தரப்பினரும், தமது கண்டனங்களைத் தெரிவித்து இவ்வாறான செயற்பாடுகளுக்கு எதிராக நடவடிக்கை எடுக்க வேண்டும் எனவும், இவ்வாறு உதவி செய்பவர்களின் நிதி கையாளுகை தொடர்பில் விசாரணைகளை முன்னெடுக்க வேண்டும் எனவும் கோரி வந்தனர்.

இந்நிலையில் குறித்த காணொளியில் உள்ள குடும்பத்தினர் பண்டத்தரிப்புப் பகுதியில் வசித்து வரும் நிலையில், அவர்களுடன் சமரசம் பேசச் சென்ற சமயம், அயலவர்கள் பொலிஸாருக்கு அறிவித்த நிலையில், பொலிஸார் சம்பவ இடத்திற்கு விரைந்து யூரியூப்பரை பொலிஸ் நிலையம் அழைத்துச் சென்று விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர்.

அதேவேளை குறித்த சம்பவம் தொடர்பில் மனிதவுரிமை ஆணைக்குழுவின் யாழ்.பிராந்திய அலுவலகம், சிறுவர் நன்னடத்தைப் பிரிவினர் உள்ளிட்ட தரப்பினர்கள் விசாரணைகளை முன்னெடுத்துள்ளதுடன் சம்பந்தப்பட்ட யூரியூப்பர் தொடர்பில் பாராளுமன்ற உறுப்பினர் மருத்துவர் அர்ச்சுனா பாராளுமன்றத்தில் பிரஸ்தாபித்திருந்ததுடன் குறித்த யூரியூப்பரின் நடவடிக்கையை முக்கியமுக நூல்களும் கண்டித்துள்ளமை இங்கு குறிப்பிடத்தக்கது. (ந-7,33)

## போலிப்...

விடுத்துள்ளது.

அண்மைக் காலமாக வெளிநாட்டுப் பல்கலைக்கழகங்களின் பெயர்களைப் பயன்படுத்தி மோசடிகள் அதிகரித்துள்ள நிலையில் கல்வி அமைச்சு விசேட அறிவிப்பொன்றை விடுத்துள்ளது.

அதில் வெளிநாட்டுப் பல்கலைக்கழகங்களுடன் இணைந்து பட்டப்படிப்பு கற்கைநெறிகளை வழங்கும் நிறுவனங்கள் முறையாக பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவில் பதிவுகளை மேற்கொண்டிருக்க வேண்டும்.

எனினும் சில நிறுவனங்கள் முறைகேடான வகையில் செயற்படுகின்றன. ஒழுங்குபடுத்தப்படாத நிறுவனங்கள் மேற்கொள்ளும் பட்டங்களுக்கு உரிய அங்கீகாரங்கள் கிடைக்காது.

எனவே, மாணவர்கள் வெளிநாட்டுப் பட்டப்படிப்புகளைத் தொடங்குவதற்கு முன்னர், சம்பந்தப்பட்ட நிறுவனங்களை முறையாக விசாரிக்க வேண்டும்.

அத்துடன், குறித்த வெளிநாட்டுப் பல்கலைக்கழகம் கொமன்வெல்த் பல்கலைக்கழக ஆண்டு புத்தகத்தில் அல்லது உலக உயர் கல்வி தரவுத் தளத்தில் பட்டியலிடப்பட்டுள்ளதா? என்பதையும் கண்டறிய வேண்டும்.

உள்ளூர் நிறுவனத்தில் இளங்கலைப் படிப்புகளுக்கு விண்ணப்பிக்க முன் அங்கு போதுமான வசதிகள் உள்ளதா? என்பதையும், உள்ளூர் நிறுவனம் வெளிநாட்டுப் பல்கலைக்கழகத்தில் நேரடிப் பதிவுக்கான வசதிகளை வழங்குகிறதா? என்பதையும் உறுதி செய்து தெரிந்து கொள்ளுங்கள்" என அமைச்சு தெரிவித்துள்ளது.

மேலும், அமைச்சினால் அங்கீகரிக்கப்பட்ட பட்டங்களின் அதிகாரப்பூர்வ பட்டியல் www.mohe.gov.lk இல் கிடைப்பதாகவும் மற்றும் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகங்களின் விபரங்களை அதன் உத்தியோகபூர்வ இணையத்தில் பார்வையிடலாம் என்றும் அமைச்சு அறிவித்துள்ளது. (ந-7)


மஹஜன சம்பத
திகதி 2025.03.09
சீட்டிழுப்பு இலக்கம் 5770
ஆங்கில எழுத்து G வெற்றி இலக்கங்கள் 8 6 7 4 5 8
அத சம்பத
ஆங்கில எழுத்து G வெற்றி இலக்கங்கள் 7 4 5 8
சீட்டிழுப்பு இலக்கம் 0345
National Lotteries Board

தன நிதானய
திகதி - 2025.03.09
சீட்டிழுப்பு இலக்கம் - 1800
P 26 49 69 76 P
Double Chance 94426

மெகா பவர்
திகதி 09/03/2025
சீட்டிழுப்பு இலக்கம் 2118
E 10 08 43 62 73

ஜய JAYA
திகதி 2025.03.09
சீட்டிழுப்பு இலக்கம் 038
K 6 7 9 8

கொவிசெத
சீட்டிழுப்பு இலக்கம் 4012
சீட்டிழுப்பு திகதி 09.03.2025
S 13 59 63 65
S
தேசிய லொத்தர் சபை

HANDAHANA
உத்தியோகபூர்வ முடிவுகள்
சீட்டிழுப்பு திகதி 2025.03.09
சீட்டிழுப்பு இலக்கம் 1079
மீனம் 06 24 34 38 மீனம்
82319 45

உத்தியோகபூர்வ முடிவுகள்
09.03.2025 வெற்றி வாரம் 478
ஆங்கில எழுத்து B 9 0 1 5 5 2
65438
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.33,167,502.40
DLB

SUPER BALL
சீட்டிழுப்பு வாரம் 2744
சீட்டிழுப்பு திகதி 2025.03.09 தினம் ஞாயிற்றுக்கிழமை
04 09 66 70 Q
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 91,111,341.60
DLB

சனிதா
திகதி 09.03.2025 வெற்றி வாரம் 4905
18 41 53 71 E
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 56,234,972.00
93860
DLB

சசிரி
வெற்றி வாரம் 639
சீட்டிழுப்பு திகதி 09.03.2025 ஞாயிற்றுக்கிழமை
வெற்றி இலக்கங்கள் 13 33 38
வெல்லப்பட்ட மொத்தப் பரிசுத் தொகை ரூ. ரூ.200,000.00
DLB

ராசி
சீட்டிழுப்பு வாரம் 4456
சீட்டிழுப்பு திகதி 09.03.2025 தினம் ஞாயிற்றுக்கிழமை
05 22 35 50 தனுசு
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.17,632,661.20
275689
DLB

கப்ருக
ஆங்கில எழுத்து, சுப்பர் இலக்கம் மற்றும் வெற்றி இலக்கம்
A 03 02 14 50 62
1920
09.03.2025 ஞாயிற்றுக்கிழமை
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.567,908,041.60
DLB

அத கோடிபதி ADA KOTIPATHI
ஞாயிற்றுக்கிழமை
வெற்றி வாரம் 2570
சீட்டிழுப்பு திகதி 2025.03.09
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.78,257,288.80
06 26 35 51 S
575964
DLB


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மணப்பெண் தேவை

01. கோப்பாய் / சுன்னாகம், 1988, பூரட்டாதி, Finance MBA, Financial Analyst, Canada/USA dual Citizen மாப்பிள்ளைக்கு பெண் தேவை.
02. யாழ்ப்பாணம், இந்து, 1989, உத்திரட்டாதி, Bio medical and Electrical Engineering, Software Engineering, Canada Citizen மாப்பிள்ளைக்கு பெண் தேவை.
03. இணுவில், இந்து, 1990, அனுஷம், Quantity Surveying Cost Engineering, Australia Citizen மாப்பிள்ளைக்கு பெண் தேவை.
04. சங்கானை, இந்து, 1992, விசாகம், BA(hons) Accountant, UK citizen மாப்பிள்ளைக்கு பெண் தேவை.
05. கிளிநொச்சி, இந்து, 1991, ரேவதி, MBBS doctor மாப்பிள்ளைக்கு பெண் தேவை.
06. நெல்லியடி, இந்து, 1991, MSc Quantity Surveying Engineering, UK Citizen மாப்பிள்ளைக்கு பெண் தேவை.
07. புலோலி, இந்து, 1993, புனர்பூசம், Bachelor of Computer Science, Sweden Citizen மாப்பிள்ளைக்கு பெண் தேவை.
08. உடுப்பிட்டி, இந்து, 1990, உத்திரட்டாதி, PHD, Civil Engineer, Canada மாப்பிள்ளைக்கு பெண் தேவை.
09. தெல்லிப்பளை - மீசாலை, இந்து, 1990, விசாகம், MBBS doctor மாப்பிள்ளைக்கு பெண் தேவை. (3620)

எம்மிடம் எல்லா ஜாதியிலும், எல்லா நாட்டிலும் Unmarried மற்றும் Divorce மாப்பிள்ளைகளும் மணப்பெண்களும் உண்டு.

S.Sharma J.P
www.thaalee.com
077 539 3728

## ஓய்வு பெற்றோருக்கான வேலைவாய்ப்பு

யாழ்ப்பாணத்தில் இயங்கும் பிரபல நிறுவனத்திற்கு ஆங்கிலத்தில் கடிதங்கள் எழுதக்கூடியவர்கள் தேவை. கணனி ரைப்பிங் தெரிந்தவர்கள் விரும்பத்தக்கது.

அடிப்படை சம்பளம் - 45,000/- (3612)

**077 936 1427**

NO.206, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.

வலம்புரி விளம்பரத் தொடர்புகளுக்கு
076 636 3378 | 076 097 3127

## UK BUSINESS VISITOR VISA

லண்டனில் இடம்பெறும் LONDON TAMIL MARKET

வர்த்தக கண்காட்சியில்..

உங்கள் வியாபாரத்தினை
பொருட்கள்/உள்ளூர் உற்பத்தி பொருட்கள் / சேவைகள் நீங்களே நேரடியாக சென்று சர்வதேச சந்தையில் விளம்பரப்படுத்த



- விசா விண்ணப்பங்கள்
- STALL BOOKING
- HOTEL BOOKING
- RETURN AIR TICKET
- பயண ஒழுங்குகள்
- போன்ற அனைத்து சேவைகளுக்கும்

தொடர்புகளுக்கு (C-2421)

V2 TRAVELS 0777068777

## ஆகாஸ் நகை மாடம்

வங்கியில் அடகு வைத்த நகைகளை மீட்க முடியவில்லையா? நாம் மீட்டுத்தருகின்றோம்

யாழ்ப்பாணம், நெல்லியடி, பருத்தித்துறை, சாவகச்சேரி, கொடிகாமம், கிளிநொச்சி, மானிப்பாய், சுன்னாகம், அச்சுவேலி, சங்கானை, வல்வெட்டித்துறை, உடுப்பிட்டி, காரைநகர், வவுனியா, மன்னார் ஆகிய பகுதிகளில்

வங்கியில் அடகு வைக்கப்பட்ட அடகு நகைகளை நகைக்கேற்ப பெறுமதியைப் பார்த்து வங்கியிலேயே பணத்தைத் தந்து வாங்கப்படும். (C-2420)

**076 825 7716** (ஆகாஸ்)

## வேலைக்கு ஆட்கள் தேவை

ஏழாலை மத்தியில் இயங்கிவரும் பிரபல உணவகம் ஒன்றிற்கு சமையலாளர்கள், உதவியாளர்கள் உடனடியாகத் தேவைப்படுகின்றனர். தகுதியானவர்கள் தொடர்பு கொள்ளவும். சம்பளம் நேரில் பேசித் தீர்மானிக்கப்படும்.

உரிமையாளர் (விஜி) (3619)

**076 924 0612**

## வேலையாள் தேவை

யாழ்ப்பாணத்தில் உள்ள சைவ உணவகம் ஒன்றிற்கு தங்கி நிற்கும் வேலையாட்கள் தேவை.

- ♦ பார்சல் கட்டுபவர்
- ♦ உணவு பரிமாறுபவர்

சம்பளம் நேரில் பேசித் தீர்மானிக்கப்படும்.

**071 999 9658** (916)

## காணி விற்பனைக்கு

சுன்னாகம் கந்தரோடை வீதி, ஆலடிச் சந்தியில் இருந்து 200m தூரம் கணக்கர் வளவில் தென்னை மரம், மலசலகூட வசதியுடன் வெறும் காணி விற்பனைக்குண்டு. (3621)

**077 311 6568**

## காணி விற்பனைக்கு

நீர்வேலிச் சந்தியில்
அருமையான சூழலில் 7 பரப்புக் காணி உடன் விற்பனைக்குண்டு. (3583)

**074 38 25 961**
**076 91 97 566**
**077 46 87 645**

## யாழ்ப்பாணம் - திருச்சி விமான சேவைகள்

யாழ் - திருச்சி விமானப் பயணச் சீட்டுக்கள்
33,000/= இலிருந்து விசேட விலையில் எம்மிடம் பெற்றுக்கொள்ளலாம்.
மற்றும் அனைத்து நாடுகளுக்குமான ரிக்கற்றுக்களை எம்மிடம் பெற்றுக் கொள்ளலாம். (914)

APEX TRAVELS

0777 597 598, 076 3333 644
இல.105/1, மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம்.
(யாழ். CTB பஸ் தரிப்பிடத்திற்கு அருகில்)

## விசாக்கான (Show money)

வங்கி இருப்பு உறுதிப்படுத்தி தரப்படும்.

குறைந்த சதவீதத்தில்%
- Visit visa
- Student visa
- Fixed & saving

சகல நாடுகளுக்குமான விசா சேவைகள்
தொடர்புகளுக்கு : (907)

**075 033 6759**


## தேவை

அரச சார்பற்ற நிறுவனம் ஒன்றிற்கு அலுவலக கிளீனிங் வேலைக்கு ஆள் தேவை. (பெண்கள் மட்டும்) ஒரு நாளுக்கு - 2000/= (மாதத்தில் 5 நாட்கள்) (912)

**077 706 3527**

## மரண அறிவித்தல்

பிறப்பு
18 - 05 - 1947



இறப்பு
08 - 03 - 2025

### சுப்பிரமணியம் கமலநாதன்

வளலாய் அச்சுவேலியைப் பிறப்பிடமாகவும் வறணன் கதிரிப்பாய், அச்சுவேலியை வசிப்பிடமாகவும் கொண்ட சுப்பிரமணியம் கமலநாதன் அவர்கள் கடந்த (08.03.2025) சனிக்கிழமை அன்று இறைபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சுப்பிரமணியம் - சரஸ்வதி தம்பதியரின் அன்பு மகனும் காலஞ்சென்றவர்களான அப்புத்துரை - பத்தினியார் தம்பதியரின் அன்பு மருமகனும் செல்வராணி அவர்களின் அன்புக் கணவரும் செல்வகரன் (லண்டன்), மலர்விழி (அபிவிருத்தி உத்தியோகத்தர் - யாழ்ப்பாணப் பிரதேச செயலகம்) ஆகியோரின் அன்புத் தந்தையும் தமயந்தி (லண்டன்), பகீரதராஜ் (ஆசிரியர் - யா/புனித சாள்ஸ் ம.வி) ஆகியோரின் பாசமிகு மாமனாரும் தன்வந் (லண்டன்), வைரவ் (லண்டன்), ஆரன் (கொக்குவில் இந்து ஆரம்பப் பாடசாலை), அஸ்வின்ராஜ் (கொக்குவில் இந்து முன்பள்ளி) ஆகியோரின் அன்புப் பேரனும் கமலேஸ்வரி, கமலநாயகி ஆகியோரின் அன்புச் சகோதரனும் கருணாகரன் அவர்களின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (10.03.2025) திங்கட்கிழமை காலை 10 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் இடம்பெற்று பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக வளலாய் கூனங்காடு இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

வறணன், கதிரிப்பாய், அச்சுவேலி.
077 397 5179, 077 607 9844, 076 928 8980
தகவல்: குடும்பத்தினர் (C-2407)

## 1ஆம் ஆண்டு நினைவஞ்சலி

அன்னை மடியில்
21 - 05 - 1961



ஆண்டவன் அடியில்
21 - 02 - 2024

### அமரர் சிறீலதா சந்தனராசா (லதா)

திதி - பூர்வபக்ஷ துவாதசி

அம்மா என அழைத்தால்
ஓடிவந்து அணைப்பவளே - இன்று
அம்மா, அம்மா என அலறுகிறோம்
உன் திருமுகம் காண முடியவில்லையம்மா
ஆண்டொன்று ஆனதம்மா உன்திருமுகத்தை காணவில்லை
மீண்டும் இங்கே வாராயோ - எம்
வேதனைகள் தீராயோ?
அப்பா இங்கே கதறுகிறார் - என்
கண்மணி எங்கே போனதென்று
கண்ணீர் ஒன்றே தஞ்சமென்று - என்
கவிதை உன்னை கெஞ்சுதம்மா
ஆழ்கடல்தான் உன் அன்பு - அதில்
அலைபோல் தவழ்ந்தோம் உன் மடியில்
என்றும் உங்கள் நினைவுடனே வாழுகிறோம்
எமக்காய் நீ இங்கே மறுபடியும் வந்து பிறந்திடம்மா.

பாடசாலை வீதி, எழுதுமட்டுவாழ் தெற்கு, எழுதுமட்டுவாழ்.

என்றும் உங்கள் மீளா நினைவுகளுடன் வாழும்
கணவர், தாய், சகோதரர்கள், மக்கள், மருமக்கள், பெறாமக்கள், பேரப்பிள்ளைகள் (906)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை வலம்புரி நியூஸ் பேப்பர் (பிறைவேற்) லிமிட்ரெட் ஸ்தாபனத்தாரால் இல.191, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 10.03.2025 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.